பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 08 வெள்ளிக்கிழமை (21.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :145

# 24, 25 இல் பேச்சு நடத்தும் திட்டம் 'அவுட்'

## சுமுகநிலை ஏற்பட்ட பின்பே அது சாத்தியம் போவரிடம் தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு



கிளிநொச்சி,ஏப்ரல் 21

**இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சுகள், இரண்டாவது தடவையாகக் குறித்தொதுக் கப்பட்ட ஏப்ரல் 24, 25ஆம் திகதிகளிலும் நடைபெறமாட்டா.**

**களத்தில் சுமுகநிலை ஏற்பட்ட பின்னரே நேரடிப் பேச்சுக்கு சாத்தியங்கள் உண்டு என்பதைத் தமிழீழ விடுலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த நோர்வே அனுசரணைப் பணிக்கான சிறப்புத் தூதுவர் ஜான் ஹன்ஸன் போவ ரிடம் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார் என அறியவருகின்றது.**

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான இரண்டாவது சுற்று அமைதிப் பேச்சுகள் ஏப் ரல் 19, 20, 21 ஆம் திகதிகளில் ஜெனீவா வில் நடைபெறும் என முதலில் அறிவிக்கப் பட்டது.

எனினும், புலிகளின் கிழக்குத் தளபதி கள் வன்னிக்கு வந்து தமது தலைமையைச் சந்திப்பதற்கான - பாதுகாப்பான பயண ஏற் பாடுகளைச் செய்வதில் ஏற்பட்ட தாமதம், குழப்பம் மற்றும் களத்தில் இடம்பெறும் மோச மான வன்முறைகள் காரணமாக அத்திகதி களில் பேச்சு நடைபெறாமல் போயிற்று. இந் நிலையில் எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் இந்தப் பேச்சுகளை நடத்த உத்தேசிக்கப்பட் டது.

ஆனால், முன்னைய அதே காரணத்துக் காகப் புதிய திகதிகளிலும் பேச்சை நடத்த முடியாத நிலைமை தோன்றியிருப்பதை நேற்று நோர்வே சிறப்புத் தூதுவர் ஹன்ஸன் போவ ரிடம், தமிழ்ச்செல்வன் நேரடியாகத் தெரிவித் தார் என அறியவந்தது.

ஜெனீவாப் பேச்சுகள் குறித்து திட்டவட்ட மான முடிவின்றியே நேற்றைய சந்திப்பு முடி வடைந்ததாகத் தெரியவருகின்றது.

நோர்வேயின் விசேட தூதர் ஹன்ஸன் போவர் தலைமையிலான நோர்வேக் குழுவுக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் குடும்பஸ்தருக்கு நேற்றிரவு சூடு!

குடத்தனை,ஏப்.21

காரைநகர் பகுதியில் நேற்று இரவு பத்து மணியளவில் ஆயுதபாணிகளின் துப்பாக் கிச் சூட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒரு வர் படுகாயமடைந்துள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த கனகரட்ணம் செல் வராசா (வயது-37) என்பவேர படுகாய மடைந் தவராவார்.

இவர் வீட்டின் வெளிக்கதவைப் பூட்டு வதற்காக வீட்டிலிருந்து வெளியேவந்தபோதே இனந்தெரியாதவர்களால் மறைந்திருந்து துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தில் தலையில் படுகாயமடைந்த அவர் காரைநகர் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டார்.

(ஒ-14-78)

### நாளைய கல்விச்சுடரில்

புமைப்பரிசில் வினாத்தாள், விடைக்குறிப்புகள், பொருளியல் விடைக்குறிப்புகள் என்பன வெளி வரும்.

## கன்னியாவில் குண்டு வீச்சு!

திருமலை,ஏப்.21

திருகோணமலை - அனுராதபுரம் வீதி யில் நேற்றுக்காலை வீதிச் சோதனையில் ஈடு பட்டிருந்த படையினர் மீது கன்னியாப் பகுதி யில் வைத்து கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் இந் தச் சம்பவம் இடம்பெற்றது. இதனையடுத்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்று சந் தேகிக்கப்படும் சிலர் துப்பாக்கிப் பிரயோ கம் செய்தனர் எனவும் அதன்போது படை யினர் நடத்திய பதில் தாக்குதலில் விடுத லைப் புலிகள் தரப்பில் ஒருவர் கொல்லப்பட் டார் எனவும் படையினர் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சண்டை நடைபெற்ற இடத்தி லிருந்து கைக்குண்டொன்றும், மகஸின் ஒன்றும் கைப்பற்றப்பட்டன எனவும் படைத் தரப்பு மேலும் தெரிவித்துள்ளது. (க)

## தற்போதைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இருதரப்பினரும் பற்றுறுதியோடு செயற்பட வேண்டும்

### கிளிநொச்சியில் போவர் தெரிவிப்பு



கிளிநொச்சி,ஏப்.21

''தற்போது உருவாகியுள்ள மோசமான சூழலில் மாற்றம் ஏற்பட இருதரப்புகளும் வன் செயல்களைக் கைவிட வேண்டுமென அனுசரணையாளர்கள் என்ற வகையில் இரு தரப்பினரிடமும் விண்ணப்பித்துள்ளோம். இருதரப்பும் பற்றுறுதியுடன் செயற்படுவார் கள் என நம்புகிறோம்''

- இவ்வாறு கூறினார் நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் ஹன்ஸன் போவர்.

கிளிநொச்சியில் நேற்று விடுதலைப் புலி களின் தலைவர்களுடன் நடத்திய பேச்சைய டுத்துச் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சமாதான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட இருதரப்புகளுடனும் பயனுள்ளவகையில் பேச்சுகள் இடம்பெற்றன. தற்போது உருவாகி யுள்ள மோசமான சூழலைச் சீராக்கவேண் டிய பொறுப்பு இருதரப்புக்கும் உண்டு. இரு தரப்புகளுடனும் நடத்திய பேச்சுகளின் போது வன்செயல்களைக் கைவிட்டு சுமுகமான நிலையைப் பேணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினோம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை, ஜெனீவாக் கூட்டறிக்கை ஆகியவற்றைச் சீராக இருதரப் பும் மதித்து நடப்பதன் அவசியத்தை இரு தரப்புக்கும் எடுத் துக்கூறினோம். இரு தரப்பும் இதில் கரிசனை காட்டுகின்றனர். ஜெனீவாப் பேச் சில் பங்குபற்ற வும் இரு தரப்பு களும் தயாராகவிருக்கின்றன. அண்மைய வன்செயல்களை நோர்வே கண்டிக்கும் செய்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலித் தளபதிகளின் பயணத்துக்கு பெரிய ரக தனியார் ஹெலி வசதி?

### வாய்ப்புகளை ஆராய்கிறதாம் நோர்வேத் தரப்பு

கொழும்பு,ஏப்.21

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்கள் தமது தலைமையைச் சந்திப்பதற்காக வன்னிக்கு வந்து திரும்புவதற்கு தனியாரின் பெரிய ரக ஹெலிகொப்டர் வசதியை ஏற்படுத்திக் கொடுப் பது குறித்து தற்போது மும்முரமாக ஆராயப் படுவதாகத் தெரியவருகின்றது.

நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் நோர்வே அனுசரணைத் தரப்பின சிறப்புத் தூதுவர் ஜான் ஹன்ஸன் போவருக்கும் இடை யில் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின் போது இத்திட்டம் குறித்துப் பேசப்பட்டதாக வும் அறியவந்தது.

சுமார் 20 பேர் பயணஞ்செய்யக்கூடிய - உயரத்தில் பறக்கக்கூடிய - பாதுகாப்பான - பெரிய ரக ஹெலிகொப்டரை இந்தப் பயணத் துக்குப் பெற்றுக்கொடுக்க நோர்வேத் தரப்பு முயற்சிக்கும் எனக் கூறப்படுகின்றது.

இலங்கை விமானப்படை பயன்படுத்தும் ஹெலியினை ஒத்த இந்த ரக ஹெலிகொப் டரின் சேவையைத் தனியார் நிறுவனம் ஒன்றி

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரத்தில் இளம் வர்த்தகர் நேற்றுச் சுட்டுக் கொலை!

### மீன் வாங்குவதாக நடித்தவர் கைவரிசை

சங்கானை, ஏப். 21

சுழிபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று இனத்தெரியாதவர்களால் சுட் டுக்கொல்லப்பட்டார்.

கல்லைவேம்படியைச் சேர்ந்த தவசி தவச் சந்திரன் (வயது-35) என்பவரே சுட்டுக் கொலை செய்யப்பட்டவராவார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

சந்தைக் குத்தகையாளரான தவச்சந்திரன் கல்லைவேம்படி, றாத்தலடி சந்தையில் காலை 9.00 மணியளவில் மீன் கூறுவிலை கோரிக் கொண்டிருந்த போது அங்கு வந்த நபர் ஒரு வர் மக்களை விலத்தி நிற்குமாறு கூறினார் எனவும் -

மீன்விலை கேட்பதுபோல் நடித்து இவரைச்

(14.ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் நேற்று மட்டு. நகரில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு, ஏப்.21

ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் நேற்று மட் டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மீன் சந்தைக்குஅருகில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம் பவத்தில் செல்லத்துரை சிவகுமார் (வயது - 33) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

சின்ன ஊறணியைச் சேர்ந்த மூன்று பிள் ளைகளின் தந்தையான கரன் என்று அழைக் கப்படும் இவர் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக மட்டக்களப்பு பொதுச் சந்தைக்கு வந்த போது காலை 9 மணியளவில் சுடப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவி னரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியி ருக்கின்றனர் என மட்டக்களப்பு பொலீஸார் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவரின் சடலம் மட் டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத் துச்செல்லப்பட்டு மரண விசாரணைகளின் பின் னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (சு)

## வவுனியா மகா இறம்பைக்குளத்தில் இரு இளைஞர்களின் சடலங்கள்

வவுனியா,ஏப்.21

வவுனியா மகா இறம்பைக்குளம், குட்டி நகர் பகுதியில் துப்பாக்கிச்சூடு மற்றும் வெட் டுக்காயங்களுடன் இரு இளைஞர்களின் சட லங்கள் நேற்றுக்காலை 6 மணியளவில் பொது மக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் வாய் பிளாஸ்ரரால் ஒட்டப்பட்ட நிலையிலும் முகங்கள் துணியினால் கட்டப்பட்ட நிலையி லும் காணப்பட்டன. இந்த இளைஞர்களின் சடலங்கள் இதுவரை அடையாளம் காணப் படவில்லை. எனினும் ஒரு சடலத்தின் காலிற் குக் கீழே தமிழ்த் தேசியப்படை புதுக்குளம் வவுனியா என எழுதப்பட்டுள்ள பிரசுரம் ஒன்று காணப்பட்டுள்ளது. படைகளுடன் சேர்ந் தியங்கும் ஒட்டுப்படை ஒன்றும் தமிழ்த் தேசியப் படை என்ற பெயரில் இயங்குவது குறிப் பிடத்தக்கது. (சு-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கவச வாகனத்தில் வந்த படையினர் கிடங்குகள் தோண்டித் தேடுதல்!

## வதிரியில் மக்கள் பீதி!!

கரவெட்டி,ஏப்.21

வடமராட்சி, வதிரியில் நேற்றுக்காலை மூன்று கவச வாகனங்கள் சகிதம் வந்த பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் வெற்றுக் காணி ஒன்றில் கிடங்குகள் தோண்டி பெரும் தேடுதலில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதி மக்கள் பெரும் பீதிக்குள்ளாகியதுடன் அச்சமும் பதற்றமும் அடைந்தனர்.

காலை 10.45 மணியளவில் மூன்று கவச வாகனங்களில் வந்த இராணுவத்தினர் வதிரி டயமன்ஸ் விளையாட்டு மைதானத்தின் முன்பாக இறங்கினர். மைதானம் முன்பாக இருந்த வெற்றுக் காணியைச் சுற்றிவளைத்தனர். பின்னர் மண்வெட்டிகளால் அக்காணியில் கிடங்குகளைத் தோண்டி தேடுதல் நடத்தினர்.

படையினரால் அக்காணியில் 6 இடங்களில் பள்ளங்கள் தோண்டப்பட்டன. பின்னர் அவற்றை மண்போட்டு நிரவி விட்டு இராணுவத்தினர் திரும்பினர். அவர்கள் அங்கு என்ன தேடினர் என்று தெளிவான தகவல்கள் தெரிவிக்கப்படாத போதும் வெடி பொருள்கள் புதைத்து வைக்கப்பட்டிருப்பதான தகவலின் அடிப்படையில் இந்தத் தேடுதல் இடம்பெற்றதாக உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது.

இராணுவத்தினர் திடீரென வந்து குதித்து இவ்வாறு மேற்கொண்ட தேடுதலால் அப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்தனர். (ம-70)

## வடமராட்சியில் சோதனை தீவிரம்

வடமராட்சி,ஏப்.21

வடமராட்சியில் படையினர் சோதனை நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, பருத்தித்துறை, புலோலி, நெல்லியடி, கரவெட்டி, யாக்கரை, கற்கோவளம், குடத்தனை ஆகிய இடங்களை உள்ளடக்கிய வான் பகுதியில் படையினரின் ஹெலி ஒன்று நேற்றுக்காலை பலதடவைகள் சுற்றி வட்டமிட்டதைக் காணமுடிந்தது.

காலை 7.50 முதல் 8.15 மணிவரையிலான நேரத்தில் இப்பகுதிக்கு மேலாகத் தாழ்வாக ஹெலி பறந்தது.

கடந்த சில தினங்களாக வடமராட்சிப் பிரதேசத்தில் ஆங்காங்கே ரோந்துக்கடமையில் ஈடுபட்டுள்ள படையினர் வாகனங்களை வழிமறித்துச் சோதனையிடுவதுடன் பயணிகளையும் சோதனையிட்டுவருகின்றனர்.

இதேநேரம் நேற்றைய தினம் வடமராட்சிப் பிரதேச வீதிகளில் சன நடமாட்டம் மிகக் குறைவாகக் காணப்பட்டது. புத்தூர் படு கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்தே இந்நிலை காணப்பட்டது. (ஒ-175)

## வர்த்தகர் கொலைக்கு துக்கம் அனுஷ்டித்து கோண்டாவிலில் நேற்றுப் பூரண கதவடைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.21

கோண்டாவிலில் வர்த்தகர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கோண்டாவில் பகுதி வர்த்தக நிலையங்கள் யாவும் நேற்று இழுத்து மூடப்பட்டுக் கிடந்தன.

கோண்டாவில் பகுதியில் வர்த்தக நிலையம் நடத்திவரும் தம்பாப்பிள்ளை அம்பிகைபாகன் என்ற வர்த்தகர் நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துக்கு துக்கம் அனுஷ்டிக்கும் முகமாக கோண்டாவில் பகுதி வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டுக்கிடந்ததுடன் வாழை, தோரணங்கள் கட்டப்பட்டும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டும் இருந்தன. வர்த்தக நிலையங்கள் திறக்கப்படாததால் அப்பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. (எ-7)(25)

## அப்பாவி மக்கள் கொலைகளுக்கு பல்கலை. மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.21

அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் புத்தூர்ப் பகுதியில் இராணுவ முகாமுக்கு மிக அருகில் ஐந்து அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமையும், அண்மைய நாள்களில் திட்டமிட்டுப் பல பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மேலும் புத்தூர்ப் பகுதியில் இடம்பெற்ற படுகொலை சம்பவமானது கடந்தவாரம் திருகோணமலையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்திற்கு அடுத்த படியாக நடைபெற்ற படுமோசமான படுகொலைச் சம்பவமாகும். இப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கருகில் இராணுவ முகாம் இருப்பதோடு படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் இராணுவத்தினரால் மறிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்பே இப் படுகொலையானது இடம்பெற்றுள்ளது.

இவ் மோசமான - மனித நாகரிகமற்ற - மிலேச்சத்தனமான படுகொலைச் சம்பவத்தால் இன்று யாழ்.குடாநாட்டில் பதற்றமும் அச்சம் நிறைந்த சூழ்நிலையும் நிலவுகின்றது. இத் தொடர்ச்சியான படுகொலைகள் எப்போதும் சமாதான முன்முயற்சிகளுக்குத் துணைநிற்கப்போவதில்லை. மாறாக யுத்த சூழ்நிலைக்கே இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். - என்றுள்ளது. (ஒ)

### ஊழியர் படுகொலையைக் கண்டித்து

## மாநகரசபை ஊழியர்கள் நேற்று நண்பகலுடன் பணிப் புறக்கணிப்பு

யாழ்.மாநகரசபை ஊழியர்கள் நேற்று நண்பகல் ஒருமணியுடன் தமது பணிகளைப் புறக்கணிப்புச் செய்தனர்.

யாழ்.மாநகரசபை ஊழியரான கந்தசாமி கௌரிபாலன் புத்தூரில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் - அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலுமே பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதாக யாழ்.மாநகர சபை ஊழியர் நலன்புரிச் சங்கம் அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, யாழ்.மாநகர சபை ஊழியர் நலன்புரிச் சங்கம் விரிவான பத்திரிகைச் செய்திக் குறிப்பு ஒன்றையும் விடுத்துள்ளது. (எ-203)(25)

## திருடர் பயத்தால் அடுப்பினுள் வைத்த நகைகள் சமையலின்போது உருகின

கைதடி,ஏப்.21

அடுப்பினுள் மறைத்துவைத்த தங்க நகைகள் தீயில் உருகிய சம்பவம் கடந்த திங்கட்கிழமை கைதடிப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இந்த வீட்டு உரிமையாளரின் மனைவி திருடர் பயம் காரணமாக தனது தங்க நகைகளை பை ஒன்றினுள் போட்டு பாதுகாப்புக்காக அடுப்பினுள் வைத்துவிட்டு தோட்டத்திற்குச் சென்றுவிட்டார்.

அவ்வேளை - வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய கணவன் வீட்டில் மதிய உணவு சமைக்கப்படவில்லை என்பதனைக் கண்டு சமையல் செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டார். அடுப்பில் நெருப்பை மூட்டி சமையல் செய்தார். சமையல் முடியும் தறுவாயில் தோட்டத்திலிருந்து வீடு வந்த மனைவி அடுப்பினுள் நெருப்பு எரிவதைக் கண்டு அலறி அழத் தொடங்கினார். திடீரென மனைவி அலறுவதைக் கண்ட கணவன் அழுவதற்கான காரணத்தைக் கேட்டார். மனைவி அழுகையின் நடுவே அடுப்பினுள் நகைகளை வைத்த விடயத்தைச் சொன்னார். விரைந்து செயற்பட்ட கணவன் உடனடியாக அடுப்பினுள் நீரை ஊற்றி தீயை அணைத்தார். அடுப்பினுள் இருந்த நகைகளை வெளியே எடுத்துப் பார்த்த போது அவை உருகிக் கறுத்த நிலையில் காணப்பட்டன. (ஒ-75)

## அதிரடிப் படையை இலக்குவைத்து களுவாஞ்சிக் குடியில் கிளைமோர்

ஏறாவூர்,ஏப்.21

மட்டக்களப்பு - கோட்டைக்கல்லாறு பிரதான வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினரை இலக்குவைத்து களுவாஞ்சிக்குடிப் பகுதியில் நேற்றுக்காலை எட்டு மணியளவில் கிளைமோர் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும், இந்தத் தாக்குதலின் போது விசேட அதிரடிப் படையினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. சக்திவாய்ந்த கிளைமோர் குண்டே வெடித்ததாகவும், இதன்போது விசேட அதிரடிப் படையினர் மயிரிழையில் உயிர்தப்பினர் எனவும் அதிரடிப் படையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து விசேட அதிரடிப் படையினர் இந்தப் பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர். ஆனால், எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இதேவேளை, மட்டக்களப்பு - கல்முனை வீதியின் புதுக்குடியிருப்பு பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர், மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டொன்றை மீட்டுச் செயலிழக்கச் செய்தனர்.

இந்தச் சம்பவங்களையடுத்து மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் வாகனப் போக்குவரத்து நேற்றுக்காலை சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது. பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (க)

## வீட்டுத் திட்டப் பயனாளிகள் பட்டியல் தென்மராட்சியில் மக்கள் பார்வைக்கு

தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக வங்கியின் நிதிஉதவியுடன் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட 618 பயனாளிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியல் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்திலும், இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் பொதுஇடங்களிலும், பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வீட்டுத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக இத் திட்டத்திற்கு கணனி மூலம் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை வருமாறு:-

வரணி இயற்றாலை - 101, மந்துவில் மேற்கு - 69, கைதடி, நுணாவில் - 50, கைதடி, நாவற்குளி - 44, சரசாலை தெற்கு - 41, வெள்ளாம் போக்கட்டி - 40, குடமியன் - 34, இடைக்குறிச்சி - 29, தாவளை, இயற்றாலை - 29, கொடிகாமம் தெற்கு-26, மிருசுவில் வடக்கு - 22, கொடிகாமம் வடக்கு - 19, மந்துவில் கிழக்கு -19, மந்துவில் வடக்கு - 18, மிருசுவில் தெற்கு - 16, கல்வயல் - 14, கொடிகாமம் மத்தி - 12, மட்டுவில் வடக்கு - 12, கோயிற்குடியிருப்பு - 11, நாவற்காடு - 8, நுணாவில் மத்தி - 4. (ஒ-117)

## சாவகச்சேரியில் நேற்று பதற்றம்

தென்மராட்சி,ஏப்.21

சாவகச்சேரி மகளிர் கல்லூரியை அண்டிய பகுதியில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் பாரிய வெடிச்சத்தம் கேட்டது. இதனால் நகர்ப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. அப்பகுதியில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஷெல் ஒன்றை படையினர் வெடிக்க வைத்தனர். அதுவே வெடிச் சத்தத்துக்கு காரணம் என்பதையறிந்த பின்னரே நிலைமை வழமைக்குத் திரும்பியது. (ஒ-117)

## திரைப்படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தினரது ஏற்பாட்டில் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மேற்படி நிலையத்தில் ஆர்.செல்வராஜன் இயக்கத்தில் உருவான 'உப்பு' என்ற தமிழ்த் திரைப்படம் அகன்ற திரையில் காண்பிக்கப்படும்.

படக் காட்சியின் இறுதியில் படம்பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் வருகைதந்து பயன்பெற முடியுமென ஏற்[illegible]றனர். (ஒ)

## அனுராதபுரத்திலும் கிளைமோர் வெடிப்பு

அனுராதபுரம்,ஏப்.21

அனுராதபுரம் - பதவியா, அபிமன்னபுர பிரதேசத்தில் நேற்றுக்காலை 2கிளைமோர் குண்டுகள் வெடித்தன.

கெப்பிற்றிக்கொலாவ - பதவியா வீதியில் நேற்றுக்காலை வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் அபிமன்னபுர 13 ஆவது மைல்கல்லுக்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான பொருள் ஒன்றைஅவதானித்தனர்.

இதனையடுத்து அனைவரையும் தரையில் படுக்குமாறு இராணுவத்தினர் அறிவித்தனர். இதன் பின்னர் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு கிளைமோர் குண்டுகள் வெடித்தன. எனினும் படைத்தரப்பினருக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இதனையடுத்து இந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. எவரும் கைதுசெய்யப்படவில்லை எனத் தெரிகிறது. (க)

## ஆறுமுகனின் பாதுகாப்பு வாபஸ்

கொழும்பு,ஏப்.21

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமானுக்கு அரசால் வழங்கப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு திடீரென வாபஸ் பெறப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கான காரணம் என்ன என்பது பற்றி உடனடியாகத் தெரியவரவில்லை. இது குறித்து மேலும் விவரங்களை பெறுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருடன் தொலை பேசியூடாகத் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் அவர் ஜப்பானுக்குச் சென்றிருக்கிறார் எனத் தகவல் தெரி[illegible] தொடர்பு [illegible] முடியவில்லை.



சுழிபுரத்தில் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்ட தவசி தவச்சந்திரன். (படம்: சங்கானைச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தொடரும் படுகொலைகள் உணர்த்துகின்ற பாடங்கள்

யாழ். குடாநாட்டில், புத்தூர் - சாவகச்சேரி வீதியில், புத்தூரில் உள்ள பிரதான படை முகாம் மற்றும் இராணுவ நிலைகளுக்கு அண்மையில் வைத்து அப்பாவித் தமிழ் இளைஞர்கள் ஐவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பின்னர் சடலங்களாக வீசப்பட்டிருக்கின்றனர். ஓட்டோ மற்றும் சைக்கிளில் அப்பாதை வழியே பயணித்த அப்பாவி மக்களே இவ்வாறு கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இப்படுகொலைகளுக்கான குற்றச்சாட்டு விரல் படைத் தரப்பை நோக்கி நீள, வழமைபோல் அக்குற்றச்சாட்டை மறுத்துரைத்து நிராகரித்திருக்கிறது இராணுவத் தரப்பு.

திருகோணமலை நகரப் பகுதியிலும் கடந்த ஜனவரி இரண்டாம் திகதி இவ்வாறு தமிழ் அப்பாவி மாணவர்கள் ஐவர் மிகக் குறுகிய தூரத்தில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

அந்தப் படுகொலைகளை மூடிமறைக்க சிங்கள அரசு பகீரதப் பிரயத்தனம் எடுத்தது. கொல்லப்பட்ட மாணவர்கள் ஐவரும் புலிகள் என்று தென்னிலங்கை ஊடகங்கள் தீர்மானம் எடுத்து அறிவித்தன. ஐவரும், அரச படைகளுக்கு எறிவதற்காக எடுத்துவந்த கைக்குண்டே தவறுதலாக வெடித்ததில் அவர்கள் ஐவரும் கொல்லப்பட்டனர் என்றும் அவை பிரகடனம் செய்தன. ஆனால், தமிழ் ஊடகங்கள் உண்மையை அம்பலப்படுத்தின. அதற்காக - உண்மையை உலகுக்கு எடுத்துக் கூறிய குற்றத்துக்காக - தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் திருகோணமலை மண்ணிலேயே சுட்டு வீழ்த்தப்பட்டார். படுகொலை செய்யப்பட்டார்.

அது தவிர, ஐந்து தமிழ் மாணவர்களின் படுகொலைக்கு நியாயம் ஏதும் கிடைக்கவில்லை. குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படக் கூட இல்லை.

திருகோணமலையில் ஐந்து அப்பாவித் தமிழ் இளைஞர்களை துப்பாக்கி முனையில் சுட்டுக் கொன்றவர்கள் யார் என்பது அரசுக்கு மட்டுமல்ல, அதன் தலைவரான ஜனாதிபதிக்கும் கூட நன்கு தெரிந்ததுதான். ஆனாலும் எந்த நடவடிக்கையும் அவர்களுக்கு எதிராக எடுக்கப்படவில்லை.

அராஜகம் புரியும் படைத்தரப்பை சட்டத்தின் முன் நிறுத்தாமல் காப்பாற்றி வருவதன் மூலம் இத்தகைய அராஜகங்களுக்கு வாய்ப்பளித்து ஊக்குவித்து வருகிறது தென்னிலங்கை அரசு.

இந்தப் பின்னணியில்தான் புத்தூர் கோரக் கொலைகளும் அரங்கேறி யிருக்கின்றன.

இதன் சூத்திரதாரிகளும் சட்டத்தின் முன் நிறுத்தப்படப் போவதில்லை என்று எதிர்பார்க்கலாம்.

சில சமயங்களில் இக்கொலைகளுக்கான குற்றச்சாட்டுகளை புலிகள் மீது சுமத்தும் தந்திரமும் கூட அரங்கேறலாம். அப்படி ஒரு 'கோயபல்ஸ்' பிரசாரம் அரசின் தந்திரோபாய உத்தியின் ஓர் அங்கமாக முன்னெடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தப் படுகொலைகளை வெறி பிடித்த இராணுவத்தினரே புரிந்திருக்கின்றனர் என்று குற்றம் சுமத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர்.

"இப்படுகொலைகள் ஒவ்வொரு தமிழனினதும் தேசிய ஆன்மாவை ஒரு கணம் உலுப்பி உறைய வைத்துள்ளன." - என்று புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் குறிப்பிட்டிருப்பது முழு உண்மையாகும்.

"இவ்வாறான படுகொலைகள் மூலம் மக்களிடம் மரண பீதியை ஏற்படுத்தி, அச்சுறுத்தி அவர்களை அடிபணிய வைப்பதே இத்தாக்குதல்களின் நோக்கம்." - என்று அரசியல்துறையினர் சுட்டிக்காட்டியிருப்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

ஈனத்தனமான தாக்குதல்கள், அப்பாவிகளைப் படுகொலை செய்யும் கொடூரங்கள் என்பன எல்லாம் தமிழர் தாயகத்தில் - குறிப்பாக அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் - கட்டுமட்டில்லாமல் நிகழ்கின்றன.

இத்தகைய படுகொலைகள் மூலம் தமிழர்களின் விடுதலை உணர்வின் ஆன்மாவை - அதன் உறுதியை - தகர்த்தெறிந்து விடலாம் என்று சிங்களம் நினைக்குமானால் அது வெறும் பகல் கனவாகவே முடியும்.

இனத்தின் இருப்புக்கு எதிரான இத்தகைய கொடூரங்கள் விடுதலை உணர்வை இன்னும் விஞ்சி எழ வைக்குமே தவிர, தமிழரை அடங்கிப் போக -அடக்கிப் போக - வைக்கா என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்ந்து கொள்வது - புரிந்து கொள்வது - நல்லது.

இந்நிகழ்வுகளும், கொடூரங்களும் தமிழர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் முறைமை ஒன்றை உருவாக்குவதற்குத் தயாராவதே அவற்றிலிருந்து விடுபடுவதற்கான ஒரே மார்க்கம் என்பதை அவர்களுக்கு உணர்த்தி நிற்கின்றன என்ற அரசியல்துறையினர் கருத்தும் கவனிக்கத்தக்கது.

கொக்குவில் பகுதியில் பயங்கரம்

# ஒரே இரவில்; ஒரே இடத்தில் நான்கு வீடுகளில் கொள்ளை!

## பல லட்சம் பெறுமதியான நகை, பணம் அபகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 21

கொக்குவில் பகுதியில் ஒரே இரவில் நான்கு வீடுகளில் கொள்ளை இடம்பெற்றுள்ளது. அடுத்தடுத்து இருந்த மூன்று வீடுகளிலும் அவற்றுக்குச் சற்றுத் தொலைவில் இருந்த மற்றொரு வீட்டிலும் இருந்தவர்களை ஆயுதமுனையில் மிரட்டிய கொள்ளையர்கள் 20 லட்ச ரூபாவுக்கும் மேலான பெறுமதிமிக்க நகைகளையும் ரொக்கப்பணத்தையும் துணிகரமாகக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொக்குவில் கிழக்கு சிவாஸ் வீதியில் அடுத்தடுத்துள்ள மூன்று வீடுகளிலும் கோண்டாவில் நாராயண வீதியில் உள்ள ஒரு வீட்டிலும் கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டித் தப்பிச் சென்றுவிட்டனர். நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கோண்டாவில் நாராயண வீதியில் உள்ள செல்லையா கணேஸ் என்பவரின் வீட்டிற்குள் வாள்கள் பொல்லுகள் என்பவற்றுடன் முகத்தினை கறுப்புத்துணியால் மறைத்துக் கட்டியபடி உள்நுழைந்த கொள்ளையர் நால்வர் வீட்டின் முன் கதவினை அடித்து உடைத்து உள்நுழைந்துள்ளனர். ஏனைய கொள்ளையர்கள் வீட்டினைச் சுற்றி நின்று "யாரும் சத்தம் போடக்கூடாது இல்லையேல் கொன்றுவிடுவோம்" என்று அதட்டிக் கொண்டிருந்துள்ளனர்.

வீட்டினுள் நுழைந்த நால்வரும்வீட்டில் இருந்தவர்களை வீட்டின் அறை ஒன்றினுள் வைத்துப் பூட்டி விட்டு சுமார் 80 பவுண் நகைகளையும் 15 ஆயிரம் ரூபா பணத்தினையும் சுருட்டிச் சென்றனர். பெண்கள் அணிந்திருந்த நகைகளையும் கழற்றித் தருமாறு வாள்முனையில் வெருட்டி பறித்துச் சென்றுள்ளனர்.

அதே கொள்ளையர் குழு கொக்குவில் கிழக்கு சிவாஸ் வீதியில் உள்ள செந்தில்நாதன் என்பவரின் வீட்டுக்குள் புகுந்தும் தன் கைவரிசையைக் காட்டியுள்ளது. மதில் ஏறிப்பாய்ந்து உள்நுழைந்த கொள்ளையர்கள் வீட்டின் வெளியே ஒளிர்ந்து கொண்டிருந்த மின் விளக்குகளை அடித்து நொறுக்கிவிட்டு யாரும் சத்தம் போடக்கூடாது என்று மிரட்டியுள்ளனர். அதன் பின்னர் வீட்டின் கதவை அடித்து உடைத்து உள்நுழைந்து அங்கிருந்த இரண்டு வயது பச்சிளம் குழந்தையின் கழுத்தில் வாளை அழுத்தி அதனைப் பணயமாகப் பிடித்துக் கொண்டனர். நகைகளை எடுத்துத்தருமாறும் இல்லையேல் குழந்தையைக் கொன்றுவிடப் போகிறோம் எனவும் மிரட்டி அங்கிருந்த 15 பவுண் நகைகளையும் 20 ஆயிரம் ரூபா பணத்தினையும் சுருட்டிச்சென்றுள்ளனர்.

அடுத்து அருகில் உள்ள முன்னாள் அதிபர் சண்முகநாதன் மற்றும் சபாரத்தினம் ஆகியோரின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள், வீட்டில் உள்ள அனைவரையும் அறை ஒன்றினுள் வைத்துப் பூட்டி விட்டு அங்கிருந்த பலலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் கையடக்கத் தொலைபேசிகள் பலவற்றையும் சுருட்டிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, இதே வீதியில் மேலும் இரண்டு வீடுகளுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் கொள்ளையடிக்க எத்தனித்த போதும். விடிந்துவிட்டதால் தப்பிச்சென்றதாக அந்த வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை சம்பவம் இடம் பெற்ற இடங்களிற்குச் சென்ற யாழ். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண் டனர். (ம-13-7-69)

# பெற்றோல் விநியோகம் நாளை முதல் வழமைக்குத் திரும்பி விடும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.குடாநாட்டில் எரிபொருள்களுக்கு குறிப்பாக, பெற்றோலுக்கு நிலவிவரும் தட்டுப்பாடு பெரும்பாலும் நாளை சனிக்கிழமை முதல் வழமைக்குத் திரும்பிவிடும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடாநாட்டில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெளிவந்துள்ள செய்திகள் குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புத்தாண்டு விடுமுறைகளுக்குச் சென்ற பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் மீளக் கடமைக்குத் திரும்புவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் எரிபொருள் விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டிருந்தது.

எனினும், நேற்றைய தினம் 52 ஆயிரத்து 800 லீற்றர் பெற்றோல் எடுத்து வரப்பட்டு உடனடியாகவே, சகல எரிபொருள் நிலையங்களுக்கும் தலா 3 ஆயிரத்து 300 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று பிற்பகல் முதல் சகல எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் தேவையான அளவு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

எனவே, எரிபொருளை அளவுக்கு அதிகமாக கொள்வனவு செய்வதையோ, பதுக்குவதையோ சம்பந்தப்பட்டவர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அநேகமாக, நாளை சனிக்கிழமையுடன் எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பிவிடும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)(23)



யாழ்.நகரில் உள்ள எரிபொருள்நிலையம் ஒன்றின் முன்பாக நேற்று மாலை தமது மோட்டார் சைக்கிள்களுக்கு பெற்றோல் பெறுவதற்காக கூடிநின்றவர்களைப் படத்தில் காணலாம். (படம் : தமிழினியன்)


## உதயவாக்கு

பிரச்சினைகளை நினைத்து வருந்துவதை விட அதை மறந்து இருப்பதே மேல்.

- ஓர் அறிஞர்.

## நாளை

சித்திரை 09
சனிக்கிழமை
22.04.2006
திதி: நவமி
பிற்பகல் : 03.07 வரை
நட்சத்திரம் : திருவோணம்
முற்பகல் : 10.13 வரை
சுபநேரம் : 03.01 - 04.31
ராகுகாலம் : 09.01 - 10.31




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

சாவகச்சேரியில் மோட்டோறோலா தொலைபேசி, பூத் ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776622087, 0773276340. (சி-49025)

### காணி விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மெயின் வீதியில் வீட்டுடன் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0114202623. (சி-49024)

### வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (Annex) பகுதியாகவும் வழங்கப்படும். கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொடர்பு: 0779578244. (49639)

நல்ல நிலையில் சகல வசதிகளும் கூடிய 3 அறைகளும் 2 பெரிய விறாந்தைகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: பொன்னையா வில்வரத்தினம், இல.31, கொன்மன் வீதி, யாழ்ப்பாணம். T.P. 077977416. (49631)

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாள்களில் 2kg இற்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 22.04.2006 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜிவ், ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை, றஞ்சித் - 517, ஸ்ரான்லி வீதி, P.ரவி- சாவகச்சேரி. (49607)


# அரசின் செயல்களைக் கண்காணிக்க யாழில் கனேடிய உதவித் தூதரகம்!

## கனேடிய ஆளும் கட்சி உறுப்பினர் கோருகிறார்

கனடா, ஏப். 21

இலங்கைக்கு கனடா வழங்கும் உதவிகள், ஒழுங்கான முறையில் மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை அவதானிக்கவும், இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கவும் யாழ்ப்பாணத்தில் கனேடிய உதவித் தூதரகம் ஒன்று திறக்கப்பட வேண்டும் என்று புதிய கனேடிய அரசாங்கத்துக்குப் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்திருக்கிறார் பிரபல பத்திரிகையாளரும், கடந்த பொதுத்தேர்தலில் ஆளும் 'கன்சர்வேட்டிவ்' கட்சி சார்பில் 'ரொறன்ரோ மிட்டவுன்' தொகுதியில் போட்டியிட்டவருமான அரசியல்வாதி பீட்டர் கென்ற்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கனேடிய அரசு விதித்துள்ள தடையை வரவேற்கும் இவர், மனித உரிமை மீறல் சம்பவங்களிலிருந்தும், துஷ்பிரயோகங்களிலிருந்தும், அரசாங்கத்தின் ஆசீர்வாதத்தோடு கட்டவிழ்த்து விடப்படும் உள்நாட்டுக் கலவரங்களிலிருந்தும் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்றார்.

''இந்த விடயங்களைக் கண்காணிப்பதற்கு கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகம் சிறப்பாகச் செயற்படுகிறது என்று சொல்ல முடியாது. பெருமளவு பின்னடைவாகவே செயலாற்றுகிறது. எனவேதான், யாழ்ப்பாணத்தில் கனடாவின் உதவித் தூதரகமொன்றின் தேவையை நான் வலியுறுத்துகிறேன்.'' - என்றும் அவர் தெரிவிக்கிறார்.

''இலங்கை செயல்பட வேண்டிய தருணம் இதுவே'' என்ற தலையங்கத்தில் 'நஷனல் போஸ்ட்' என்ற தினசரியில் பீட்டர் கென்ற் விமர்சனக் கட்டுரையொன்றை எழுதியிருக்கிறார். அதிலேயே யாழ்ப்பாணத்தில் கனேடிய உதவித் தூதரகம் ஒன்று திறக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையைக் கொண்டு வந்ததோடு அரசு நின்றுவிடக்கூடாது. இதற்கு மேலாகச் செய்யுமாறு அரசு இலங்கையைக் கேட்கவேண்டும்'' என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

''புலிகள் மீதான தடை விதிப்பு எதிர்பார்க்கப்பட்டமை போல ரொறன்ரோ வாழ் தமிழ் மக்களில் ஒரு சாராரிடையே நிம்மதிப் பெரு மூச்சையும், ஆனந்தக் கண்ணீரையும் தந்திருக்கிறது. இன்னொரு சாரார் மத்தியில் விரக்தியையும், வேதனையையும், அழுகையையும் கேட்க வைத்துள்ளது.

''புலிகள் மீதான தடை நீண்ட காலத்திற்கு முன்னரே கனடாவில் கொண்டு வந்திருக்கப்பட வேண்டும். அதை இப்போது செய்து ஒரு காலணியைக் கழற்றியுள்ளோம் ஆனாலும், நல்ல பரிபூரணமான ஓர் உலகின் கண்ணே 'கன்சர்வேட்டிவ் கட்சி' செய்ய வேண்டிய இன்னுமொரு காரியம் உண்டு. அது ஒட்டோவாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் மற்றுமொரு காலணியைக் கழற்றி எறிந்து விட்டு வருவதாகும். ஏன், எதற்காக என்று நீங்கள் கேட்கலாம். இங்கே வாழ்கின்ற எமது தமிழ் சாதியத்தினர் கனேடிய சமுதாயத்தின் உறுப்பினர்களாகத் தங்களை வரித்துக்கொண்டு ஆனந்தமாக வாழும் வாழ்க்கை வேறு. அதேசமயம் அவர்களது உற்றார், உறவினர்கள், நண்பர்களின் குடும்பங்கள் வன்செயல்களால் பீடிக்கப்பட்டிருக்கும் தமது பிறந்த தாயகத்தில் அனுபவிக்கும் துன்ப துயர வாழ்க்கை வேறு. இந்த இரண்டுக்கும் இடையில் இங்குள்ள எமது தமிழ்ச் சமுதாயம் சிக்கித் தவிக்கிறது. இதற்கு முடிவு கட்ட வேண்டும்.'' - இப்படியும் பீட்டர் கென்ற் தனது விமர்சனத்தில் எழுதியிருக்கிறார்.

மூன்று லட்சம் தமிழர்கள் கனடாவைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கையைச் சேர்ப்பதற்கு எதிர்ப்பு!

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கையைச் சேர்க்க ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஹொங்ஹொங்கைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஆசிய மனிதஉரிமை ஆணைக்குழு இவ்விடயம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது -

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உறுப்பினராக இணைவதற்கு இலங்கை அண்மையில் விண்ணப்பம் செய்துள்ளது. ஆசிய நாடுகளில் இலங்கையில் மட்டுமே அதிக அளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, இலங்கையில் மீறப்பட்டு வரும் மனித உரிமைகள் தொடர்பாக 2003ஆம் ஆண்டும், 2005ஆம் ஆண்டு நவம்பரிலும் செய்யப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை.

இலங்கையிலுள்ள நீதித்துறை, பொலீஸ் துறை என்பனவற்றின் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றன. முழு ஆசியாவிலுமே இலங்கையில் மட்டுமே காணாமற்போனோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில், ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிபார்சுகளையும், செஞ்சிலுவை சர்வதேச குழுக்களினது சிபார்சுகளையும், யுனிசெவ் நிறுவனங்களின் சிபார்சுகளையும் புறக்கணித்துவரும் இலங்கையை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

- என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# தற்போதைய அசாதாரண நிலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதிக்கு ம.ம. முன்னணித் தலைவர் கடிதம்

கொழும்பு,ஏப்.21

''நாட்டில் தற்போது தோன்றியுள்ள அசாதாரண நிலையைக் கட்டுப்படுத்தி அமைதிப் பேச்சுக்கான முயற்சிகளை முன்னெடுக்கவும், நிரந்தர சமாதானத்துக்கான வழிமுறைகள் மேற்கொள்ளவும் உரிய நடவடிக்கையை தாங்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.''

- என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அவர் அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு அவர் வலியுறுத்தியுள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

நாட்டில் தற்போது தோன்றியுள்ள நிலைமை மிகப் பாரதூரமான இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதனை உடனே கட்டுப்படுத்த வேண்டும்.

அவ்வாறு கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்தில் நாளுக்குநாள் நிலைமை மோசமாகி பெரும் அழிவுகளை எதிர்நோக்கும் சூழலே ஏற்படும்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமல்ல முழு உலகில் வாழும் தமிழ் மக்களுக்கும் இந்நிலை பெரும் ஏக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இனப்பிரச்சினைத் தீர்வில் தீர்க்கமான முடிவு ஒன்றை தாங்கள் எடுக்க வேண்டும். இதற்கான ஆணையை நாட்டு மக்கள் தற்போது தங்களுக்கு வழங்கியுள்ளனர்.

ஆகவே, சமாதான முயற்சிகளில் இனவாதிகளின் தடைகளை அலட்சியம் செய்துவிட்டு இன்று நாட்டில் எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)


சீட்டிழுப்பு இல. 1702

19.04.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

06 21 40 42 08

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201107720 இலிருந்து 201116204

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 57,11,700/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1 | 57,11,700/- | 57,11,700/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | - | - | - |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 18 | 5,000/- | 90,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 219 | 1,000/- | 2,19,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 750 | 500/- | 3,75,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 10,812 | 40/- | 4,32,480/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 10,230 | 20/- | 2,04,600/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 1,53,668 | 10/- | 15,36,680/- |
| மொத்தம் | | | 85,69,460/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், சைக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 1,75,703 | | 91,69,460/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 20,00,000/-

| | |
|---|---|
| காலி | 201111180-5-16 |
| களுத்துறை | 201111358-6-05 |
| மட்டக்களப்பு | 201114689-6-25 |
| கண்டி | 201113986-2-37 |
| புத்தளம் | 201108403-3-96 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


# சமூக சேவை அமைச்சின் ஏற்பாட்டில் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.21

சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த பங்களிப்பு வழங்கிய அலுவலர்களைப் பாராட்டும் நிகழ்வும் புதிய ஓய்வூதிய பிரேரணைத் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் சமூகப் பாதுகாப்புச் சபை இந்த விழா தொடர்பான அழைப்பிதழை நாட்டிலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும், சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. (204)

# முதியோர் அ.அட்டை விநியோகம்

கைதடி,ஏப்.21

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட பதின்மூன்று முதியவர்களுக்கு அண்மையில் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறை அமைச்சினால் மேற்படி அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-75)

# தினமும் பிற்பகல் 3 மணியுடன் வெறிச்சோடிவிடும் சாவகச்சேரி நகரம்

தென்மராட்சி,ஏப்.21

சாவகச்சேரி நகர்ப் பகுதி புத்தாண்டின் பின்னர் பிற்பகல் 3.00 மணியுடன் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

இப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்தே இந்த நிலைமை காணப்படுகிறது.

பிற்பகல் 3.00 மணிக்கு முன்னரே வர்த்தக நிலையங்கள், சந்தை ஆகியவை மூடப்பட்டு நகரப்பகுதி வெறிச்சோடி விடுகிறது.

நகர்ப்பகுதியில் உள்ள அலுவலகங்களில் கடமையாற்றுவோர் மட்டும் மாலை 5 மணி வரை நகர்ப் பகுதியில் நடமாடுவதைக் காண முடிகிறது. (எ-117)

# ஊனமுற்றோருக்கு உபகரணங்கள்

கைதடி,ஏப்.21

கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் 6 முச்சக்கரவண்டிகள், 4 காதுகேட்கும் கருவிகள் மற்றும் 2 மூக்குக் கண்ணாடிகள் என்பன வழங்கப்பட்டதாக கோப்பாய் பிரதேச சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன் தெரிவித்தார். (எ-75)


## Annual General Body Meeting 2006

The council Members have decided to have the Annual General Meeting to elect new members on 6th May 2006 at 12.00 noon at the NTS Lecture hall, Teaching Hospital, Jaffna. The Office bearers will be elected.

All the Members and Doctors are cordially invited

Secretary
JMA

Jaffna Medical Association
General Hospital(Teaching)
Jaffna, Sri Lanka.

(C/49027)(21.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாஜிக் கொள்ளையர்கள் நடிக்கும் சினிமாப் படம்

உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களைக் கிடுகிடுக்க வைத்த படுபயங்கர கொள்ளையர்கள் நடிக்கும் சினிமா படத்துக்கு கதை வசனம் எழுதுகிறார் முன்னாள் டி.ஜி.பி. கொள்ளையர்கள் பற்றி படம் எடுக்கும்போது கற்பனை கதையை தழுவி எடுக்காமல், ஏன் உண்மையான கொள்ளையர்களைப் பற்றிய கதையை எடுக்கக் கூடாது என்று இயக்குநர் கிருஷ்ண மிஸ்ராவுக்கு ஏற்பட்டது.

அதற்கு ஒத்துழைத்து வடிவம் கொடுத்தவர் தான் உத்தரப்பிரதேச மாநிலத்தில் டி.ஜி.பி.யாக இருந்த துவிவேதி. அவர்தான் இந்தப் படத்துக்கு கதை வசனம் எழுதுகிறார். இதில் நடிப்பது யார் தெரியுமா? உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், மத்திய பிரதேசத்தில் ஒரு காலத்தில் கலக்கி வந்த பிரபல கொள்ளையர்கள் மால்கான் சிங், மான் சிங், மொகர் சிங்தான். (202)

# பெரும் ஆர்ப்பாட்டத்துக்கு ஆயத்தங்கள்; நேபாளத்தில் 'கண்டதும் சுடும்' உத்தரவு!

காத்மண்டு,ஏப்.21




நேபாள தலைநகர் காத்மண்டுவில் 18 மணி நேர ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்படுவோரை 'கண்டதும் சுடும்' படியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மன்னர் ஜியானேந்திராவுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் போராட்டங்கள் நேபாளம் முழுவதும் பரவியுள்ளது. தலைநகரில் பெரும் எடுப்பிலான ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்துவரும் வேளையில் அதனை எதிர்நோக்கும் வகையில் அரசு 18 மணிநேர ஊரடங்கு ஒன்றை அறிவித்துள்ளது.

ஜியானேந்திராவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இரண்டு வார கால போராட்டத்தில் இதுவரை 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சிகளின் போராட்டத்தில் மாவோ தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். ஊரடங்குச் சட்டத்திற்கு மேலாக மனித உரிமைப் போராட்டக்காரர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மீதான வீட்டுக் காவல் காலத்தையும் அரசு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் நேபாளத்தில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு ஒரு தீர்வினை உருவாக்க உதவும் வகையில் இங்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரண் மன்னருடன் வியாழக்கிழமை பேச்சுக்களை ஆரம்பிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. (ப)(22)

# சதாமின் கையெழுத்துக்களே ஆவணங்களில் காணப்படுகின்றன

## நீதிமன்றில் நிபுணர்கள் சாட்சியம்

பாக்தாத்,ஏப்.21

ஈராக்கில் 1982ஆம் ஆண்டு துஜேல் பகுதியில் 148 ஷியா கிராமவாசிகளை படுகொலை செய்வதற்கான பணிப்புரை ஆவணங்களில் அப்போதைய ஈராக்கிய அதிபர் சதாம் ஹூசைன் கையெழுத்திட்டிருந்தார் என்பதற்கான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

கொலைசெய்வதற்கான பணிப்புரை ஆவணங்களில் அவர் கையெழுத்திட்டிருந்தார் என்பதற்கான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது சதாம் அமைதியாக இருந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

ஆவணங்களில் காணப்படும் கையெழுத்து அவருடையதுதான் என்ற முடிவுக்கு கை எழுத்து நிபுணர்கள் வந்துள்ளனர்.

1982ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைகள் தொடர்பாக சதாமும் வேறு ஏழுபேரும் விசாரிக்கப்பட்டு வருகின்றார்கள்.

அக்கொலைகளுடன் முன்னாள் ஆட்சியாளர் சதாமை நேரடியாகத் தொடர்புபடுத்தும் ஆயிரக்கணக்கான ஆவணங்களை அரச தரப்பு சட்டத்தரணிகள் சமர்ப்பித்து வாதிட்டார்கள்.

எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் குறித்த கையெழுத்துக்கள் போலியானவை என்று தொடர்ந்து வாதிட்டார்கள். கையெழுத்து நிபுணர்கள் அரச தரப்புடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர்கள் ஒருதலைப்பட்சமாகவே செயற்படுகிறார்கள் என்றும் எதிர்த்தரப்பினர் வாதிட்டனர்.

விசாரணைகள் ஏப்ரல் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (ப)(22)

# 41 ஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ்தானில் இந்தியப் படம்

புதுடில்லி,ஏப்.21

பாகிஸ்தான் மண்ணில் 41 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக மீண்டும் இந்திய சினிமா படம், தியேட்டரில் வெளியிடப்படுகிறது.

எதிர்வரும் 25ஆம் திகதி வெளியாகும் 'தாஜ் மகால்' படம் வெளியீட்டு விழாவில் பொலிவூட்டில் இருந்து ஹ்ருதிக் ரோஷன், சீனியர் நடிகை ரேகா உட்பட பெரிய பட்டாளமே செல்கிறது. என்னதான் இந்தியாவுடன் பாகிஸ்தான் பழமைவாதிகள் 'எதற்கெடுத்தாலும் பிரச்சினை செய்து கொண்டிருந்தாலும், பல ஆண்டாகவே பொலிவூட்டில் இருந்து செல்லும் இந்திய படங்கள் மீது அந்த நாட்டு மக்களுக்கு அலாதி பிரியம்.

தியேட்டர்களில் பொலிவூட் ஹிந்திப் படங்களை போடுவது நிறுத்தப்பட்டு 41 ஆண்டுகள் ஆகிவிட்டாலும், கசெட், 'சிடி'க்கள், பாடல் கசெட்கள் என்று விற்பனை கொடிகட்டிப் பறக்கத்தான் செய்தது. பொலிவூட் நட்சத்திரங்கள் சிலருக்கு பாகிஸ்தானில் சொந்தவீடும் உள்ளது.

41 ஆண்டுக்கு பின்னர் முதன் முறையாக மீண்டும் இந்தியப் படம் ஒன்று, பாகிஸ்தான் தியேட்டரில் வெளியிடப்படுகிறது.

லாகூரில், பொலிவூட் இயக்குநர் அக்பர் கான் இயக்கிய, 'தாஜ்மகால்' படம் வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது. 'தாஜ் மகால்' படத்தை பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பார்ப்பதற்காக 24ஆம் திகதி தனியாக பிரத்தியேக காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (202)(22)

# தேர்தல் டிஷ்யூம்.... டிஷ்யூம் ஒரே நாளில் படப்பிடிப்பு

* இயக்குநர்-நரேஷ் குப்தா
* தயாரிப்பு - தேர்தல் ஆணையம்.கொம்
* முக்கிய கதாபாத்திரங்கள்- கருணாநிதி, ஜெயலலிதா
* புதுமுகம் - நடிகர் விஜயகாந்த்
* துணை நடிகர்கள் - நெப்போலியன், சரத்குமார், எஸ்.வி.சேகர், பாக்யராஜ், முரளி...
* துணை நடிகைகள்- சிம்ரன்,விந்தியா, கோவை சரளா...
* கதை,வசனம்- வைகோ, தயாநிதி மாறன்
* இசை - திருமாவளவன், ராமதாஸ், ப.சிதம்பரம் குழுவினர்
* ஒரே நாளில் படப்பிடிப்பு - மே.8 (வாக்குப்பதிவு தினம்);
* பட ரிலீஸ் திகதி - மே.11 (வாக்கு எண்ணிக்கை தினம்)
* திரையரங்குகள்- ஜெயாரீ.வி, சன் ரீ.வி, (காலைக்காட்சி மட்டும்)
* படம் ரிலீஸ் ஆனபிறகு...- மக்கள் தீர்ப்பே மகேஷன் தீர்ப்பு அல்லது மக்கள் தீர்ப்பை ஏற்கின்றேன் : ஜெயலலிதா - புதிய விடியலுக்குத் தமிழகம் தயாராகிவிட்டது - அல்லது தி.மு.க. வாக்கு வங்கி குறையவே இல்லை : 12 சதவீதம் அதிகரித்துள்ளது : கருணாநிதி
* விருது வழங்கும் நாள்-மே12 அல்லது மே13 - சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபம் அல்லது வள்ளுவர் கோட்டம்

(தமிழக தேர்தல் களத்தைச் சினிமா படப்பிடிப்புடன் தொடர்புபடுத்தி 'தினமணி' வெளியிட்ட ஆக்கம் இது).



தோள் கொடுப்பான் தோழன். சீனாவில் உள்ள வுகன் மாகாணத்தில் பறவைக்காய்ச்சல் பரவியுள்ளது. அங்கு தனித்து விடப்பட்ட கோழியிடம் பரிவு காட்டுகிறது இந்த நாய்.

## அதிக வாக்கு சேகரித்தால் தங்கமோதிரம் பரிசு

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளருக்கு அதிக வாக்குகள் சேகரிக்கும் கட்சித் தொண்டருக்கு தங்க மோதிரம் பரிசு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. வேட்பாளர் எஸ்.பி. காளிமுத்துவுக்கு அதிக வாக்குகள் கிடைக்கும் வாக்குச் சாவடிக்குப் பொறுப்பான வாக்களிப்பு நிலைய உறுப்பினர் 11 பேருக்கு தலா 2 கிராம் தங்கமோதிரம் வழங்குவதாக கே.பதினெட்டம்படியான் எம்.எல்.ஏ. அறிவித்தார். அதேபோல அதிக வாக்குகள் கிடைக்கும் ஊர் கிளைச் செயலருக்கு தலா ஒரு பவுண் மோதிரம் வழங்குவதாக கமுதி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் டி.சேகரன், ராமநாதபுரம் மாவட்ட மின் வாரிய அண்ணா தொழிற் சங்கச் செயலர் ராஜேந்திரன் அகியோர் அறிவித்தனர். ஏற்கனவே 2 பவுண் தங்கமோதிரம் பரிசு வழங்கப்படும் என்று மாவட்ட மாணவர் அணிச் செயலர் வழக்கறிஞர் எம்.சுந்தரபாண்டியன் அறிவித்துள்ளார். (ஐ-202)(22)

# இதுவரை மக்களை ஏமாற்றியோரை இந்தமுறை நீங்கள் ஏமாற்றுங்கள்!

## தமிழக வாக்காளர்களிடம் விஜயகாந்த் கோரிக்கை

சேலம்,ஏப்.21

இதுவரை மக்களை ஏமாற்றிய அரசியல்வாதிகளை இம்முறை நீங்கள் ஏமாற்றுங்கள் என்று நடிகர் விஜயகாந்த் தெரிவித்திருக்கிறார்.

சேலம் மாவட்டம் தேசிய முற்போக்கு திராவிடர் கழக வேட்பாளர்களை ஆதரித்து கன்னங்குறிச்சி, சிவதாபுரம், இளம்பிள்ளை, சங்ககிரி பகுதிகளில் அவர் கடந்த புதன்கிழமை பிரசாரம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தே.மு.தி.க. புதியகட்சி, புதியசிந்தனை, புதிய கொள்கை, புதிய ரத்தம் என்ற வகையைச் சேர்ந்தது.

எங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்ற எங்களுக்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள்.

தி.மு.கவும் அ.தி.மு.கவும் தொடர்ந்து மக்களை மாறிமாறி ஏமாற்றி வருகின்றன. எம்.ஜி.ஆர். 11 ஆண்டுகளுக்கு முதல்வராக இருந்து மக்களுக்கு சேவை செய்தார். அதை அடுத்து ஆட்சிப் பொறுப்பு வகித்த [illegible]

இலவச அரிசி வழங்குவது தொடர்பாக தி.மு.க., அ.தி.மு.கவினர் போட்டிபோட்டு வாக்குறுதி அளித்து வருகின்றனர். அவர்களுக்கு கடந்த 20 ஆண்டுகளாக மக்களின் வறுமை தெரியாமல் இருந்தது ஏன்?

இத்தேர்தலில் அ.தி.மு.க. மூன்று முறை தேர்தல் அறிக்கையை மாற்றி அறிவித்துள்ளது. நாங்கள் அப்படி அல்ல.

எனது தேர்தல் அறிக்கை எனது சிந்தனையில் உதித்தது. மக்களின் கஷ்ட நஷ்டங்களை நேரில் கண்டு அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும்.

எனது தேர்தல் அறிக்கையைத் தழுவி தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகள் தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளன. என்னைக் கண்டு அவர்கள் பயப்படுவது உறுதியாகிவிட்டது.

பொற்கால ஆட்சி அமைப்போம் எனக் கூறும் கட்சிகள் விவசாயிகள் பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்வதாக அறிவிக்கின்றன. விவசாயக் கடன்களைப் பெற்றவர்கள் முழுவதும் அரசியல்வாதிகள்தான் இந்த அறிவிப்பால் உண்மையான விவசாயிக்கு எவ்வித லாபமும் இல்லை.



நாங்கள் பொது மக்கள் பயன்பெறும் வகையில் தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளோம். நாங்கள் ஆட்சி அமைத்தில் பெண் குழந்தை பிறந்தால் ரூ.10 ஆயிரம் பணமும் வீட்டுக்கு ஒரு சீமைப்பசு, ஏழைகளுக்கு மாதந்தோறும் 15 கிலோ இலவச அரிசி மற்றும் பெண்களுக்கு பயனளிக்கும் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவோம்.

பீகார் மாநிலத்தில் வீரிய விதை மூலம் ஓர் ஏக்கருக்கு 80 மூடை நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுபோன்ற வீரிய விதைகளை தமிழக விவசாயிகளுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுப்பேன் - என்றார் விஜயகாந்த். (ஐ-202)(22)

# சொத்துகளே இல்லாத வேட்பாளர்

தமிழ் நாட்டில் தென்காசி சட்டப் பேரவைத் தொகுதிக்கு போட்டியிடும் புதிய தமிழகம் வேட்பாளர் ச.சந்திரன் புதன்கிழமை வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

வேட்பு மனுவில் கேட்கப்பட்டிருந்த ரொக்கம் ,வங்கிகளில் நிதி இருப்பு முதலீடுகள்,நகைகள், அசையாச் சொத்துகள், வீடு, நிலம் போன்ற அனைத்து கேள்விகளுக்கும் இல்லை என்று ஒரே வார்த்தையை நிரப்பியுள்ளார்.

எந்தச் சொத்தும் பணமும் இல்லாமல் தென்காசித் தொகுதியில் புதிய தமிழகம் வேட்பாளர் போடியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-202)(22)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூக அபிவிருத்தி மன்றத்தினால் நடத்தப்பட்ட கணக்கியல் பயிற்சிக் கருத்தரங்கு நிகழ்வில் ஆஸ்திரேலியாவில் இருந்து வருகைதந்த திருமதி மா.பிரதீவிராஜ் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் - பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட கழகங்களினதும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பிரதிநிதிகளை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

## 'அன்பினால் ஒற்றுமை' அமைதிக்கான நிகழ்வு

தென்மராட்சி, ஏப்.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 'அன்பினால் ஒற்றுமை' என்னும் குறிக்கோளுடனான நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் இந்த அமைதிக்கான செயற்றிட்ட நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவத்தில் யாழ் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினர் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு சகல பாடசாலை அதிபர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (8-117) (19)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 20 - 06 - 1933



ஆண்டவன் அடியில் 24 - 03 - 2006

திருமதி

**அபிராமிப்பிள்ளை அருளானந்தம்**

*வையத்துள் வாழ்வாங்கு சிறப்புற வாழ்ந்து எம்மை வழி நடத்தி 24.03.2006 ஆம் நாளன்று அமரத்துவம் எய்திய எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் பல்வேறு வழிகளில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் சித்திரை மாதம் 10ஆம் நாள் (23.04.2006) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்*

- குடும்பத்தினர்.

விநாயமுதலியார் வீதி,
பருத்தித்துறை.

(சி/49020) (24.21.14.19)


# சாவகச்சேரி குண்டுத் தாக்குதலுக்கு தாங்கள் பொறுப்பல்ல என்கிறது படைத்தரப்பு

சாவகச்சேரியில் மாணவர் ஒருவர் உட்பட இரண்டு சிவிலியன்கள் உயிரிழக்கக் காரணமான குண்டுத் தாக்குதலில் இராணுவத்தினருக்கு தொடர்பு எதுவும் கிடையாது என்று யாழ்.பாதுகாப்புப் படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி செய்திக்குறிப்பு ஒன்றை உதயனுக்கு அனுப்பியிருக்கின்றார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் 17ஆம் திகதி காலை 8.50 மணியளவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சிக்கி மாணவன் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர். சிப்பாய் ஒருவரும் பொதுமக்கள் இருவரும் காயமடைந்துள்ளனர். தூரத்தில் இருந்து வீசப்பட்ட கிரனேட் ஒன்று வெடித்தது என்றும் வீதியோரமாக குவித்து வைக்கப்பட்டிருந்த குப்பைக்குள் இருந்து கிளேமோர் குண்டு வெடித்தது என்றும் முரண்பாடான தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் இராணுவத்தினரை இலக்குவைத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளேமோர் குண்டே படையினர் துப்புரவுப்பணியில் ஈடுபட்டிருந்தவேளை வெடித்தது என்று இராணுவத்தரப்பு தெரிவித்தது. பொதுமக்கள் இருவர் உயிரிழக்க காரணமான குண்டுவெடிப்பு இராணுவத்தினரால் நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு தாக்குதல் என்று பொங்கியெழும் மக்கள் படையும் தெரிவித்துள்ளது என தங்களது பத்திரிகையில் 18-04-2006 ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி செய்தி தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம், சம்பவம் இடம்பெற்ற பகுதியில் நிலை கொண்டுள்ள படையணி மற்றும் சாவகச்சேரி பொலீஸ் நிலையம் போன்றவற்றில் விசாரணைகளை மேற்கொண்டது. ஆனால் இந்தச் சம்பவத்துடன் இராணுவத்தினருக்கு எந்த வகையிலும் தொடர்புகிடையாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தங்களது பத்திரிகைச் செய்தியை நிராகரித்து மறுப்புத் தெரிவிப்பதோடு, தங்களது பத்திரிகைச் செய்தியின் காரணமாக படையினருக்கும் பொது மக்களுக்குமிடையே காணப்படும் நல்லுறவிற்குப் பங்கம் ஏற்படும் என்பதால் இதுபோன்ற தவறான செய்திகளைப் பிரசுரிக்கும் முன், உண்மை எதுவென அறிந்துகொண்டு பிரசுரிக்குமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்தப் படையினர் தடை

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், மிதிவண்டி ஆகியவை வீதியோரங்களில் நிறுத்துவதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர்.

வீதியோரங்களில் நிறுத்தப்படும் வண்டிகளை அப்புறப்படுத்துமாறு அங்கு கடமையில் உள்ள படையினர் தொடர்ந்தும் அறிவுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8-117) (19)


## அளவெட்டி - மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 'வடக்கு -கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள் ' இதற்கு அமைய யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2005.11.11ஆம் திகதிய 1419 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங் களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்:

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 29.04.2006 சனிக்கிழமை முற்பகல் 10.00மணி**

| தொடர் இல. | கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடத்தப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | 01 | அளவெட்டி கூட்டுறவாளர் வீதி | திருமதி பா.கலைச்செல்வி | அளவெட்டி மகாஜனா சபை மண்டபம் |
| 02 | 02 | தபாற்கந்தோரடி அளவெட்டி | திரு.க.சின்னராசா | கிளை 2 கட்டடம் |
| 03 | 03 | ஆலடி அளவெட்டி தெற்கு | திரு.சி.சபாரத்தினம் | அருணாசலம் வித்தியாசாலை அளவெட்டி தெற்கு |
| 04 | 04 | முதலியார் கோயிலடி அளவெட்டி | திரு.ந.ராஜா | முதலியார் கோயிலடி சனசமூக நிலைய மண்டபம் |
| 05 | 05 | அளவெட்டி வடக்கு | திரு.சி.சண்முகநாதன் | அளவெட்டி வடக்கு சனசமூக நிலைய மண்டபம் |
| 06 | 06 | கணேஸ்வரம் அளவெட்டி | திரு.வி.ஜெயந்தன் | அளவெட்டி வடக்கு அமெரிக்க தமிழ்க் கலவன் பாடசாலை கணேஸ்வரம் |
| 07 | 07 | அளவெட்டி தெற்கு | திரு.வி.சிவகுமார் | அருணாசலம் வித்தியாசாலை அளவெட்டி தெற்கு |
| 08 | 08 | மல்லாகம் சந்தி மல்லாகம் | திரு.ச.பாலகுமாரன் | விசாலாட்சி வித்தியாசாலை மல்லாகம் |
| 09 | 09 | கல்லாரை மல்லாகம் | திரு.கு.அருந்தவநாதன் | கிளை 9 கட்டடம் |
| 10 | 9A | கே.கே.எஸ். வீதி மல்லாகம் | திரு.இ.புவன்ராஜ் | விசாலாட்சி வித்தியாசாலை மல்லாகம் |
| 11 | 10 | குளமங்கால் மல்லாகம் | திரு.ஐ.நாகேஸ்வரன் | றோமன் கத்தோலிக்க பாடசாலை குளமங்கால், மல்லாகம் |
| 12 | 11 | கலைநகர் அளவெட்டி தெற்கு | திரு.க.நிஸாகரன் | கலைவாணி சனசமூக நிலையம் அளவெட்டி தெற்கு |
| 13 | 12 | நீதிமன்ற வீதி மல்லாகம் | திரு.த.செல்வரோதி | சன்மார்க்க சனசமூக நிலையம் நீதிமன்ற வீதி, மல்லாகம் |

கூ.அ.உ.ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
12.04.2006 (சி-49011)(21.19.14)

ஒப்பம்: பொ.சிவலிங்கம்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.



## நெஞ்சம் அகலாத நினைவலைகள்

நான்காம் ஆண்டு — பதினாறாம் ஆண்டு





திருமதி
**கனகாம்பிகை அருணாசலம்**

அமரர்
**செல்லத்துரை வரதலிங்கம்**
(இளைப்பாறிய அதிபர்,யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை)

07.08.1924 → தோற்றம் ← 25.09.1929
04.05.2002 → மறைவு ← 12.05.1990

திதி: 21.04.2006 — திதி: 16.04.2006

**எண்ணங்களில் வந்து நிழலாடும் ஏற்றமிகு நினைவுகள் வண்ணக் கனவுகளாய் வாழ்வில் நிலைத்திருக்கும்.**

117/4, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(49626)(21.14.19)

- குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது நிகழ்வுகளின் காட்சித் தொகுப்பு



சாவகச்சேரி பிரதேச சபை 20 இற்கு மேற்பட்ட முன்பள்ளிகளுக்கு போசாக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கியது. மேற்படி திட்டத்தை சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன் ஆரம்பித்துவைத்து போசாக்கு உலர் உணவுப் பொருள்களை முன்பள்ளி ஆசிரியை ஒருவரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

'ஹங்கேரியின் இன்ரர்சேச்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் மெதடிஸ்த திருச்சபையால் பொலிகண்டிப் பகுதியில் அமைக்கப்பட்ட மீனவர் இளைப்பாற்று மண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட 'ஹங்கேரியன் இன்ரர்சேச்' பணிப்பாளர் யூட்ரட்ணம் மண்டபத்தை திறந்து வைந்தபின்னர் உரையாற்றுவதையும் அருட்திரு சதீஸ் அடிகளார், பொலிகண்டி மீனவர் சங்கத் தலைவர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: குடத்தனைச் செய்தியாளர்).






இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையின் வளாகத்திலுள்ள ஞானவைரவர் ஆலயத்திற்கு மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த தைப் பூசத் தினத்தன்று நடைபெற்றது. விழாவில் யாழ்.சாலையின் பொது முகாமையாளர் க.கணேசபிள்ளை கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டு வைப்பதையும் மற்றும் உத்தியோகத்தர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(13)

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மநாட்டு மண்டபத்தில் அண்மையில் பண்டாரவன்னியன் நாட்டுக் கூத்து மேடையேற்றப்பட்டது. யாழ்.பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நாட்டுக் கூத்து கலைஞர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்றனர். அவ்வாறு கொழும்பு சென்ற கலைஞர்களைப் படத்தில் காணலாம்.

(படம்: குருநகர் செய்தியாளர்)





'சீடா' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் கரவெட்டி ராஜகிராமத்தில் நடத்தப்படும் மாலை நேர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வில் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் க. கஜேந்தினி மாணவனொருவருக்கு பரிசில் வழங்குதைப் படத்தில் காணலாம்.

(படம்: கொழும்புத்துறைச் செய்தியாளர்)

அளவெட்டி மேற்கு கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தினவிழா அண்மையில் அளவெட்டி மேற்கு தென்னிந்தியத் திருச்சபை தொழில் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் அளவெட்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி சி.செல்வராணி மங்கள விளக்கேற்றுவதையும் முதன்மை விருந்தினரான வலி.வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் வி.இராஜகோபாலுக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் படங்களில் காணலாம். (39)






யாழ். சமுர்த்தி மகா சங்கத்தினால் வறிய குடும்பங்களுக்கு துளம்பு வலைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் மகா சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கருத்திட்ட முகாமையாளர் திருமதி ஜெயசோதி விக்கினேஸ் பயனாளி ஒருவருக்கு தூளம்பு வலை வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் முகாமைத்துவப் பணிப்பாளர் ம. கியூமன் மற்றும் யாழ். சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் திருமதி அ. பிரபாகரன் ஆகியோர் நிற்கின்றனர். (190)

இலங்கை மத்திய போக்குவரத்து சபை வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். சாலைக்கு புதிய பஸ்களை அண்மையில் வழங்கியது.

இதில் புதிய பஸ்கள் ஆலய பிரார்த்தனையின் பின்னர் சேவையிலீடுபடுவதற்குத் தயாராக நின்றபோது யாழ்.சாலையின் பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை மற்றும் உத்தியோகத்தர்களுடன் எடுக்கப்பட்ட படம். (13)





ஞாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நிலைய உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனம் போஷாக்கு உணவுப் பொருள்களை உதவியாக வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

( படம்: நல்லூர் செய்தியாளர்)

உலகவங்கியின் வடக்கு- கிழக்கு விடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட தொழில்த்துறைத் திணைக்களத்தால் நடத்தப்படும் மேசன் பயிற்சி நெறி, சங்கானை அரச இயந்திர மட்கல நிலையத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலி.மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் மங்கள விளக்கேற்றி வைப்பதையும் நிலையத்தின் போதனாசிரியர் அ. திருச்செல்வம், யாழ். மாவட்ட தொழில்த்துறை திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் ப.இராகவன், யாழ்.மாவட்ட பொறியியலாளர் கா. வைரவநாதன் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

(படம்: சங்கானைச் செய்தியாளர்)






லண்டனில் தொழில்புரியும் அச்சுவேலியைச் சேர்ந்த டாக்டர் அமிர்தலிங்கம் ஸ்ரீமேவன் (பெண்ணியல் வைத்திய நிபுணர்) தமது தந்தையாரின் நினைவாக ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கணனி, குளிர்சாதனப்பெட்டி என்பனவற்றை அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

வைத்திய கலாநிதி அமிர்தலிங்கம் ஸ்ரீ மேவனின் சார்பில் யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஏ.கேதீஸ்வரன், அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் சி. விமலேந்திரனிடம் இவற்றைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)

டாக்டர் வெ.சக்திவேல் எழுதிய "உளவியற் சிந்தனைகள்" நூலின் வெளியீட்டு விழா அண்மையில் வட்டுக்கோட்டை மூலிகை சுக வாழ்வு நிலையத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாநிதி சைவப்புலவர் வ.கந்தசாமி, ஆசிரியர் மா.வெற்றிவேல், திருமதி சகுந்தலாதேவி வெற்றிவேல் ஆகியோருக்கு முதல் பிரதியை வழங்குவதைப் படத்தில் காணலாம். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.கேசவராஜன் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: வலி.தென் மேற்கு செய்தியாளர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு புனித யாத்திரைத்தலமான
அருள்மிகு அந்தோனி முனீந்திரர் ஆலய
## உயர் திருவிழா -2006

கொடியேற்றம்: 28.04.2006 பி.ப. 3.30 மணி
சுவாமி: ஆ.பீ. துரைரெத்தினம் அவர்கள்
கலாநிதி சுவாமி ஜெ.ஏ.ஜெயசீலன் அவர்கள்
நெறிப்படுத்தலில்
"அந்தோனி முனீந்திரர் ஐம்பொன் திருச்சுரூப திருப்பொழிவு"

* திருப்பலி (பூசை) பி.ப. 5.30 மணி
29.04.2006 சனி நற்கருணை விழா
* திருப்பலி (பூசை) பி.ப.5.30 மணி
* நற்கருணை வழிபாடு -பவனி- ஆசீர்வாதம்
30.04.2006 ஞாயிறு -உயர் திருவிழா

காலை 8 மணி திருவிழா திருப்பலி (பூசை)
காலை 9 மணி அந்தோனி முனீந்திரர் தேர்ப்பவனி
அருளாசி.
நண்பகல் 12 மணி அற்புதரின் பக்தர்களுக்கு
அன்னதானம் வழங்கப்படும்.

* விழாவுக்கு/அன்னதானத்திற்கு பங்களிக்க விரும்புவோர், ஆலயத்தில் அல்லது இல. 75, மேற்கு மார்க்கட்டு- யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் காணிக்கையை ஒப்படைக்கலாம். சமாதானத்திற்காக இப்புனித்தலத்தில் ஒன்று கூடி வழிபட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புங்குடுதீவு • நிர்வாகசபை,
அருள்மிகு அந்தோனியார் ஆலயம்.
(49616)(51-19-16)



## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

I டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் வேலை வாய்ப்புகள் உள்ளன.
பயணம் ஒரு மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை |
|---|---|
| *சிவில் இஞ்சினியர் | 20 |
| *தச்சுவேலை செய்வோர் | 100 |
| *கம்பி கட்டுபவர் | 50 |
| *மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| *மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| *மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| *அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| *மின்சார வேலையாள்கள் ( வீட்டு மின் இணைப்பு) | 20 |
| *வாகன மின்சார வேலை செய்பவர் | 10 |
| *பைப் பொருத்துபவர்கள் | 20 |
| *ஸ்பிறே பெயின்ரர்/ரிங்கர் (வாகனம்) | 20 |
| *பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் ரெயின்கிறேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்) | 20 |
| *இலத்திரனிக் மெக்கானிக் | 10 |

கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்
பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம்- 05
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.
தொடர்பு: மைக்கல்
0777 279813
குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

II சவுதி:-
சவுதி அரேபியாவில் முதன்மைக் கம்பனி (அரம்கோ) உடனடி வேலைவாய்ப்பு. 10 நாள்களில் பயணம். விசா கையிருப்பில் உண்டு.

| தொழில்கள் | தொகை |
|---|---|
| *சிவில் இஞ்சினியர் | 8 |
| *கணக்காளர் | 4 |
| *பார வாகனச் சாரதி | 15 |
| *மேசன் | 20 |
| *தச்சுவேலை செய்வோர் | 20 |
| *பிளம்பர் (பைப் பொருத்துநர்) | 10 |
| *மின் இணைப்பாளர் | 10 |
| *பாரவாகன ஓட்டுநர் (ரவர் ரெயின், கிறேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்). | 15 |

கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்
பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம்- 05
குறிப்பிட்ட தொழிலுக்குரிய சான்றிதழ் இருப்பின் கொண்டுவரவும்.
தொடர்பு: மைக்கல் 0777 279813
குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

III மலேசியாவில் வேலைவாய்ப்பு:
மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் 1½ மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை |
|---|---|
| வேலைத்தள உதவியாளர்கள் | |
| *நூடில்ஸ் கம்பனி | 30 |
| *கையுறைக் கம்பனி | 30 |
| *கூடைப்பந்துக் கம்பனி | 40 |
| *இலத்திரனியல் கம்பனி | 40 |
| *சொகுசு ஆசன கம்பனி (குசன்) | 75 |

கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்
சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச் சீட்டு, பாஸ்போட் அளவு படம் 15 (கலர்)
தொடர்பு: 0777 279813
மைக்கல்
(49527)(51-)
குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.


# அனர்த்த நிவாரணம்: கண்காணிக்க ஏற்பாடு

வலி.வடக்கு, ஏப்.21

ஆழிப்பேரலை கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் அனைத்துக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க மனித உரிமைகள் ஆனைக்குழுவினால் வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார். பாதிக்கப்பட்ட மக்கள் சமமான முறையில் அனைத்துக் கொடுப்பனவுகளையும் பெறவேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டத்தின் இணைப்பாளரான தம்பித்துரை றஜீவன் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும் பால், மத, இன வேறுபாடுகளுக்கு உள்ளாக்கப்படக்கூடாது என்பதனைக்கருத்தில் கொண்டு செயற்பட இந்த அமைப்பு மனிதஉரிமைஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் -

எவராவது பாதிக்கப்பட்டால் தமக்கு முறையிடுவதன் மூலம் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர்தெரிவித்தார். (ஓ-86)

# நாடக நூல் வெளியீடு

கரவெட்டி,ஏப்.21

தென்புலோலியூர் பரராஜரத்தீஸின் ''பாண்டியன் பாவை'' இலக்கிய நாடக நூல் வெயீட்டுவிழா தென் புலோலி புற்றளை மகாவித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் வைத்திய கலாநிதி எம். கே.முருகானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஆசியுரையை தென் புலோலி புற்றாளை சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு.சிவஸ்ரீ.எஸ். ஜெயபால சுந்தரக் குருக்கள்,சிவஸ்ரீ.எம். சிவானந்த ராஜக் குருக்கள்ஆகியோர் நிகழ்த்துவர். பிரார்த்தனை உரையை இளைப்பாறிய அதிபர் கே.வேணுகோபால் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.அம்பலவாணரும் தென் புலோலி புற்றளை மகாவித்தியாலய அதிபர் எம். அனந்தீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

நூல் வெளியீட்டுரையை இளைப்பாறிய உள்ளூராட்சிச் சேவை நூலகர் எஸ். திருச்செல்வமும், நூல் மதிப்புரையை எழுத்தாளர் எஸ்.தெணியானும் நிகழ்த்துவர்.

கே.கோகிலரதன் பெ. ஐங்கரன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்துவர். (ஓ-70)

# தென்மராட்சிப் பாடசாலைகளில் ஆய்வுகூடங்கள்

தென்மராட்சி,ஏப்.21

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றிலே இவ் ஆய்வுகூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், இவ்விரு பாடசாலைகளிலும் இருமாடிக் கட்டடங்களும் அமைக்கப் படவுள்ளன.

இதற்கான நிதியினை மாகாண கல்வி அமைச்சு வழங்கியுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-117)

# குடத்தனையில் சிறுவர் பூங்கா

தென்மராட்சிகிழக்கு, ஏப். 21

வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

மணற்காடு சந்திக்கு அருகில் இயங்கும் சுடரொளி சனசமூக நிலையத் துக்கு அருகில்5 பரப்புக் காணியில் இச் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி உதவியுடன் முழுமையான வசதிகளையும் அடக்கியதாக இப்பூங்கா அமைக்கப் பட்டுள்ளது.

விரையில் இப்பூங்கா வைபவரீதியாக திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-122)

# நிழல்குடை சேதம்

வலி.தென்மேற்கு,ஏப்.21

ஆனைக்கோட்டை சந்திக்கருகில் மானிப்பாய்- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள தகரத் திலான பஸ் பயணிகள் நிழல் கொட்டகை சேத மடைந்துள்ளது. தினமும் பெரும் எண்ணிக் கையான மக்கள் பயன்படுத்தும் இந்த நிழல் கொட்டகை விரைவில் புனரமைப் புச் செய்யப்பட வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-136)


அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

வையத்தில் 21 - 10 - 1916



வானத்தில் 22 - 03 - 2006

## திருமதி சின்னத்தங்கம் கந்தையா
(தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி)

எங்களது இல்லத்தலைவியின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து உதவிபுரிந்து, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள், மலர்வளையங்கள் சமர்ப்பித்தவர்களுக்கும் தொலைபேசி, கடிதமூலம் எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (21.04.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திரு.திருமதி இராசேஸ்வரி செல்லத்துரை,
திருமதி யோகேஸ்வரி திருச்செல்வம்
(இளைப்பாறிய கிளைமுகாமையாளர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வவுனியா)
திரு.திருமதி புவனேஸ்வரி கோவிந்தபிள்ளை (பூசா) (உபதாலதிபர் சங்கத்தானை)
தாமோதரம்பிள்ளை வீதி,சாவகச்சேரி. (49615)(51-16-19)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 17 - 07 - 1961



கண்நெகிழ 01 - 05 - 2005

## திருமதி கேதீஸ்வரி ஜெகநாதன்
திதி: அபரபக்க அட்டமி (21.04.2006)

உத்தமத் தாயாய் உன்னத மனைவியாய்
மெத்தப் போற்றும் மேலாம் சோதரியாய்
முத்தான புத்திரியாய் முதன்மை பெற்று
நித்தமும் உதவி நினைவில் நிற்கும்
நின்னை மறவா நினைவால் என்றும்
ஆண்டவன் அடியில் அமைதி பெறவே
ஆண்டாண்டாக அஞ்சலி செய்வோம்.

24/3, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(49581)(51-16-19)



## எச்சரிக்கை

மக்களின் நம்பிக்கை வென்ற WATERTEC தயாரிப்புகளைப் போன்ற அதற்குச் சமமான அமைப்புக்களைக் கொண்ட போலி சின்க் டெப் வகைகள் தனி நபரினாலோ அல்லது ஒரு குழுவினராலோ இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது

இது தரம் குறைந்த போலி தயாரிப்புகளை விற்பனை செய்து லாபமீட்டும் திட்டமிட்ட மோசடியாகும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட போலியான தயாரிப்புகள் மலேசியாவில் தயாரிக்கப்பட்டவை அல்ல என்பதை பொது மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

இந்த தரம் குறைந்த பொருட்களை தயாரிக்கும் அல்லது இறக்குமதி செய்பவர்கள் தொடர்பாக தகவல் கொடுப்பவர்களுக்கு மலேசிய WATERTEC நிறுவனத்தின் மூலம் பரிசு வழங்கப்படுவதோடு மோசடிக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

இந்த மோசடியை தவிர்ப்பது எவ்வாறு?
WATERTEC தயாரிப்புகளை வாங்கும் போது

WATERTEC
Simply Better

உண்மையான சின்னம் இருக்கிறதா என்று பாருங்கள்




License No: 50445
செண்ட் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்
524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5 பெக்ஸ்: 2446554


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூபதி, நாட்டுப்பற்றாளர் நினைவு வன்னியில் உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிப்பு

வட்டக்கச்சி,ஏப்.21

தியாகி அன்னை பூபதியின் 18ஆவது ஆண்டு நினைவுதினமும் நாட்டுப்பற்றாளர் தினமும் தாயகப் பகுதியெங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பொதுமக்கள், போராளிகள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டு நாட்டுப்பற்றாளர்களின் திருவுருவப் படங்களுக்கும் அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

வட்டக்கச்சிப் பிரதேசத்திற்கான பிரதான நிகழ்வு கடந்த 19ஆம் திகதி வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றது. வட்டக்கச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினைத் தமிழீழ கல்வித் துறையின் வட்டக்கச்சிப் பணிமனைப் பொறுப்பாளர் சி.இராஜகோபல் ஏற்றிவைக்க தேசியக் கொடியினை வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் ஏற்றிவைத்தார். அன்னை பூபதிக்கான ஈகச் சுடரினை வட்டக்கச்சிப் பிரதேச வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த சந்திரன் ஏற்றி வைக்க நாட்டுப்பற்றாளர்களின் திருவுருவப் படங்களுக்கான ஈகச் சுடர்களை அவர்களின் உறவினர்கள் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

இந்நிகழ்வில் பிரதேச வர்த்தகர்கள், பொது அமைப்புகளைச் சார்ந்தோர், பொது மக்கள் எனப் பெருமளவானோர் பங்குகொண்டனர்.

இதேவேளை, பிரதேச காவல்துறைப் பணிமனையில் காவல்துறைத் துணை ஆய்வாளர் உ.சுமதி தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. பொதுச்சுடரினை வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் ஏற்றிவைக்க தேசியக் கொடியைத் தமிழீழ காவல்துறை வட்டக்கச்சிப் பணிமனைப் பொறுப்பாளர் சி.இராஜகோபால் ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் ஈகச்சுடரினை வட்டக்கச்சி வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் இராமஜெயம் ஏற்றிவைக்க மலர்மாலையை கல்மடு வலய அரசியல் துறைப் பொறுப்பாளர் சந்திரன் அணிவித்தார்.

இதேபோன்று, அப்பகுதிப் பொது நிறுவனங்கள், பாடசாலைகளிலும் தேசியக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை, தியாகி அன்னை பூபதியின் நினைவு வணக்க நிகழ்வு கடந்த 18ஆம் திகதி காலை கிளிநொச்சி பிரதேசத்தின் அரச செயலக வளா கத்தில் பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ரஜனி தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச்சுடரினை மாவீரர் பணிமனை துணைப்பொறுப்பாளர் அர்ச்சனா ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றினார்.

அன்னைபூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாக இணைப்பாளர் இனியவன் ஏற்றிவைத்தார். மலர்மாலையினை கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் அணிவித்தார்.

தொடர்ந்து நினைவுரைகளை அரசியல் துறைப் போராளி ஒருவர், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கவே... பிள்ளை, வெண்மைச் சங்கத் தலைவர் ...க ராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச நாட்டுப்பற்றாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 17ஆம் திகதி பிற்பகல் 4.15 மணியளவில் புதுக்குடியிருப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்றது.

பொதுச்சுடரினை வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் நா.சண்முகநாதன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஏற்றிவைத்தார்.

பொது ஈகச்சுடரினை கிராம சேவகர் செ.தர்மராசா ஏற்றிவைத்தார். மலர்மாலையினை கிராம சேவகர் ந.சிவராசா அணிவித்தார். தொடர்ந்து நாட்டுப்பற்றார்களின் திருவுருப்படங்களுக்குப் பெற்றோர், உறவினர்கள் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர்.

நினைவுரைகளை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஆகியோர் ஆற்றினார்கள்.

நாட்டுப்பற்றாளர்களின் குடும்பங்களுக்குத் தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

(8-405-352-353)(24)

## 'நீர்ப்' திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்கல்

பரந்தன்,ஏப்.21

வட்டக்கச்சி கட்சன் வீதிப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு 'நீர்ப்' திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்கப்பட்டுவருகின்றது.

கட்சன் வீதியில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் கிணற்றிலிருந்து குழாய்கள் மூலம் எட்டுத் தொட்டிகளில் நீர் நிரப்பப்பட்டுப் பின்னர் மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

இந்த நீர் வழங்கும் நடவடிக்கைக்கென 40 லட்சம் ரூபா செலவில் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. (8-352)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## தேவாலய விழா

கிளிநொச்சி,ஏப்.21

பிரமந்தனாறு இறை இரக்கத்தின் இயேசு ஆலயப்பெருவிழா கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது. வழிபாடு தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகின்றன. பெருவிழாத் திருப்பலி எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் என்று பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (ஓ)

## கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பள்ளிச் சேமிப்பு அலகு ஆரம்பம்

பரந்தன்,ஏப்.21

தமிழீழ வைப்பகத்தினால் பாடசாலைகள் தோறும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாணவர்களுக்கான பள்ளிச்சேமிப்பு அலகு கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவன் செல்வன் அஜித் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழீழ வைப்பகத்தினால் ஆரம்பிக்கப்படும் ஏழாவது பள்ளிச் சேமிப்பு இதுவாகும்.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.முருகவேல் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை வணிகர் ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் ஏற்றினார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயக் கொடியினை பள்ளிமுதல்வர் யோகநாதன் ஏற்றினார். இதனைத் தொடர்ந்து பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த பள்ளிச்சேமிப்பு அலகின் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது. பெயர்ப்பலகையினை கரைச்சிப் பிரதேச செயலாளரும் நிகழ்வின் முதன்மை விருந்தினருமான செல்வி சுலோசினி திரை நீக்கம் செய்துவைத்தார்.

பள்ளிச் சேமிப்பு அலகின் கட்டடத்தை தமிழீழ வைப்பகத்தின் மேலாண்மைப் பணிப்பாளர் ம.வீரத்தேவன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கருத்துரைகளைத் தொடர்ந்து பாடசாலையில் வைப்புச்செய்த மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

பள்ளிச் சேமிப்பு அலகில் சேமிப்புச் செய்த மாணவர்களுக்கான வங்கிக் கணக்குப் புத்தகங்களைத் தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் ம.வீரத்தேவன் அதிபர் யோகநாதனிடம் வழங்கினார்.

கிளிநொச்சி மகாவித்தியலாயத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பள்ளிச் சேமிப்பு அலகில் நான்கு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-352)

## வைத்தியசாலை வீதியில் கிரவல்; நோயாளர்கள் பயணிப்பதில் சிரமம்

புதுக்குடியிருப்பு,ஏப்.21

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியில் கொட்டப்பட்டிருந்த கிரவல் நீண்டகாலமாகப் பரவப்படாமல் உள்ளமையால் வைத்தியசாலைக்கு நோயாளர்களைக் கொண்டு செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியூடாகவே நோயாளர்களை அவசர கிசிச்சைக்குக் கொண்டுசெல்ல வேண்டியுள்ளது. நோயாளர்களுடன் செல்லும் வாகனங்கள் வீதியால் செல்ல முடியாமையால் வீதியைவிட்டு இறங்கி வாய்க்கால் வழியாகவே பயணஞ்செய்ய வேண்டியுள்ளது.

இதுதொடர்பாகச் சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(8-353)

## கருவேலன்கண்டலில் பஸ் தரிப்பிடம் திறப்பு

ஒட்டுசுட்டான், ஏப்.21

கருவேலன்கண்டல் பிரதேசத்தில் அன்னை பூபதியின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் பஸ் தரிப்பிடத் திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் நடைபெற்ற இராசா தம்பதிகளின் நினைவு பஸ்தரிப்பிடத் திறப்பு விழாவில் பொதுச்சுடரினை கருவேலன்கண்டலைச் சேர்ந்தவரும் தற்போது சுவீடனில் வசித்துவருபவருமான எதிர்வீரசிங்கம் ஏற்றிவைத்தார். தியாகி அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரினைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை, முல்லை. மாவட்டத் திட்டமிடல் மேம்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் யாழவன் ஆகியோர் ஏற்றினர்.

பஸ் தரிப்பிடத் திறப்பு விழாவின் மங்கள விளக்கினை கருவேலன்கண்டல் அ.த.க. பாடசாலை முதல்வர் செல்வானந்தம், கிராம அலுவலர் ஆகியோர் ஏற்றிவைக்க பெயர்ப்பலகையினை மணலாறு பிராந்தியத் தளபதி குமரன் திரைநீக்கம் செய்துவைத்தார். தரிப்பிடத்தினை முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் செம்மணன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இராசா தம்பதியினரின் உருவப்படத்திற்கு திருமதி புஸ்பராணி எதிர்வீரசிங்கம் சுடர் ஏற்ற நெடுங்கேணிக்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் மலர்மாலை அணிவித்தார். இந்த நிகழ்வில் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(8-341)

## பூநகரி ஞானி மடத்தில் முன்பள்ளி திறந்து வைப்பு

பரந்தன்,ஏப்.21

பூநகரி ஞானிமடச் சந்திக் கிராமத்தில் உலக தரிசன நிறுவனத்தினால் (வேள்ட் விஷன்) அமைக்கப்பட்ட இதயகீதன் முன்பள்ளிக் கட்டடத் திறப்புவிழா கடந்த 30ஆம் திகதி நடைபெற்றது.

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் கி.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை ஞானிமட கிராமசேவை அலுவலர் தி.சிவலிங்கம், பூநகரிப் பிரதேச தமிழீழக் கடற்படை அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கா.கார்த்திகேசு, ஞானிமட அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி தவமலர் கனகசபை ஆகியோர் ஏற்றினர். பொதுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து தேசியக்கொடியினை பூநகரி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை பூநகரி பிரதேச முன்பள்ளிகளின் தலைவர் தா.கிருஸ்ணசாமியும் பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகக் கொடியை நிறுவனத் தலைவர் பஞ்சாட்சரமும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனக் கொடியை முன்பள்ளிகளின் இணைப்பாளர் கா.ஜெயந்தினியும் முன்பள்ளிக் கொடியை ஆசிரியை திருமதி ச.பிரதீபாவும் ஏற்றினர்.

முன்பள்ளியின் பெயர்ப்பலகையினைப் பூநகரிப் பிரதேச தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் விநாயகமூர்த்தி திரைநீக்கம் செய்துவைத்தார். முன்பள்ளிக் கட்டடத்தினை உலக தரிசன (வேள்ட் விஷன்) நிறுவன வலய முகாமையாளர் நைல் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (8-352)



வடக்கு - கிழக்கு மாகாண விவசாய காணி, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சினால் அண்மையில் முழங்காவில் கமநல கேந்திர நிலையத்தில் மக்கள் குறை நிவர்த்திசேவை நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் ரி.கே.சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றுவதையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், விவசாய, காணி, கால்நடை, அபிவிருத்தி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சுச் செயலாளர் ஏ.ஆர்.எம். மஹறூப், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் பொது மக்களின் குறைகளைக் கேட்டறிவதையும், குறைநிவர்த்தி சேவையில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளசமூகப் பணியில் வெளிப்பாட்டு முறைமைகள்

**'உள சமூகப் பணியில் வெளிப்பாட்டு முறைமைகள்' என்னும் தலைப்பிலான களப்பயிற்சி ஒன்றை செயல் திறன் அரங்க இயக்கம் இன்று யாழ். பொதுநூலகக் கேட்டோர் கூடத்தில் நடத்துகிறது. அந்நிகழ்வு பற்றிய குறிப்பு இது.**

சமூகப் பொருளாதார அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் இன்று முக்கியம் பெற்றதொரு செயற்றிட்டமாக உளசமூகப் பணித்திட்டங்கள் (Phycho social Programme) கருதப்படுகின்றன. சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் கவர்ச்சிகரமான நிதியீட்டல் திட்டமாகவும் கருதப்படுகின்றது. அபிவிருத்திச் செயல் இயக்கத்தில் வன்திட்டங்கள், மென் திட்டங்கள் என்ற இரண்டு வகைப்பாடுகள் உண்டு. கட்டடங்கள், வீதிகள், வீடுகள் அமைக்கும் பணிகளை வன்திட்டங்கள் என்று குறிப்பிடலாம். அணிதிரட்டல், உளப்பிணி நீக்கல், விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களின் வலுவூட்டல், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சிகள், தொழில் பயிற்சிகள் என்பன மென்திட்டங்கள் எனக் கணிக்கப்படுகின்றன. உள சமூகப் பணித்திட்டங்கள் மென் திட்ட வகைப்பாட்டுக்குள் அடங்கும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் உளசமூகப் பணி என்பது உளப்பிணி தீர்க்கும் சிகிச்சை மற்றும் மருந்து வழங்கலையும் ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டையும் குறிப்பதாக வெளித்தெரிகிறது. ஆனால், இன்று வன்செயற்றிட்டங்களில் செயல் இயக்க வெற்றிக்கு மென்திட்டமும் இணைக்கப்பட வேண்டுமென்பது உணரப்படுகிறது. உளத்தை அபிவிருத்திக்காக தயார் செய்கின்ற பணி முக்கியமாகின்றது. உளத்தை ஓர் இலக்கு நோக்கி நகர்த்துவதற்கு உளம் எந்தவித நெருக்கீடுகளுமின்றி தூய்மையாக தளர்வாக இருக்கவேண்டும். அதற்குப் பல்வேறு முறைமைகளைப் பயன்படுத்தமுடியும். இன்று யாழ்ப்பாணத்தில் இருபதுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் உளசமூகப் பணித்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் மனித மனங்களைப் பண்படுத்துவதற்காக தமக்குரிய பிரத்தியேக முறைமைகளைக் கையாள்கிறார்கள். சிறுவர்கள், பெண்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் இவர்களின் இலக்குக் குழுமங்களாக உள்ளனர். குறுகிய காலத்தில் கண்ணால் காணக்கூடிய விளைவுகளை உடனடியாகக் கண்டுவிட முடியாத இப்பணித்திட்டங்கள் நீண்டகாலத்தை வேண்டி நிற்கின்றன. இதற்கு ஏற்ப நீண்ட நெடிய திட்டங்கள் தீட்டப்படவேண்டும். அதற்கான ஆளணி தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் உருவாக்கப்பட்டுப் பேணப்பட வேண்டும். நல்ல வளமான உள சமூகப் பணிகளை மேற்கொள்வதற்கு வெவ்வேறு வகைப்பட்ட திறன்கள் பகிரப்படுவது அவசியம். அனுபவங்கள் கலந்துறவாடப்படுவது அவசியமாகின்றது. இதற்காக, அனுபவப் பகிர்வுக் களங்கள் உருவாக்கப்படவேண்டும். முக்கியமாக முயன்று தவறுதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட பல நல்ல விடயங்கள் பகிரப்பட்டு பட்டை தீட்டப்படுவதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

இந்த எண்ணப்பாங்குடன் செயற்றிறன் அரங்க இயக்கம் (Active Theatre Movement) உளசமூகப் பணியில் வெளிப்பாட்டு முறைமைகள் என்ற தலைப்பில் களப்பயிற்சியொன்றை யாழ்.நூலகக் கேட்போர் கூடத்தில் 21.04.2006 இன்று காலை 9.30 - 4.30 மணி வரை ஒழுங்குசெய்துள்ளது. இதில் உளசமூகப் பணித்திட்டங்களில் ஈடுபடும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றுகிறார்கள்.

இரண்டு அமர்வுகளாக நடைபெறும் இக்களப்பயிற்சியில் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

உளசமூகப் பணியில் விளையாட்டுகள், நடன அசைவுகள் ஊடான உளச்சிகிச்சை, அரங்கச் செயற்பாடுகள் ஊடான உளசமூகப் பணிகள், ஆற்றுப்படுத்தல் பணியில் அரங்கத் திறன்கள், சித்திரம் வரைதல் ஊடான உளச்சிகிச்சை, பிணி தீர்க்கும் பணியில் எடுத்துரைப்பு முறைமைகள், உளத் தளர்நிலைக்கான பயிற்சிகள், பக்தி மார்க்கம் ஒரு வெளிப்பாட்டு முறைமையா? போன்ற தலைப்புகளில் கருத்துரைகளும் செயலமர்வுகளும் நடைபெறும்.

இக்களப்பயிற்சிக்குரிய வளவாளர்களாக வ.அனவரதன், திருமதி பா.மோகனா, தே.தேவானந்த், த.சிவகுமார், திருமதி ச.யசோதரா, ந.நவராஜ், வைத்திய கலாநிதி இ.சிவசங்கர் ஆகியோர் செயற்படுவார்கள்.

இக்களப்பயிற்சியைத் தொடர்ந்து மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட வெளிப்பாட்டு முறைமை தொடர்பான விரிவான ஒருநாள் களப்பயிற்சி திட்டமிடப்பட்டுள்ளதாக செயற்றிறன் அரங்க இயக்கம் தெரிவித்துள்ளது. (ஐ)



கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் கைதடியில் நடத்தப்பட்ட மனைப் பொருளியல் டிப்ளோமா பயிற்சி வகுப்பின் பயிலுநர்களால் நடத்தப்பட்ட கண்காட்சியை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் திறந்து வைப்பதையும் அருகில் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் தா.தியாகலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் சி.உமாபாலன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்: தென்மராட்சிச் செ[illegible]தியாளர்)

## இருதயநோய் பாதித்த சிறுவனுக்கு நிதியுதவி

கிளிநொச்சி, ஏப்.21

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட ஒன்றரை வயது சிறுவனுக்கு மருத்துவ சிகிச்சைக்கென பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் 15 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

வட்டக்கச்சி சில்வா வீதியைச் சேர்ந்த சிறீதரன் மேருஜன் என்ற சிறுவனுக்கு இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவர் நேற்றுமுன்தினம் அவருடைய பெற்றோருடன் மருத்துவ சிகிச்சைக்காக கொழும்பு தனியார் மருத்துவமனை ஒன்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (8-13)

## பாடசாலை மீண்டும் ஆரம்பம் ஆலயத்தில் விசேட பூசை

தென்மராட்சி, ஏப்.21

கடந்த 20 வருடங்களாக மூடப்பட்டிருந்த சாவகச்சேரி கெருடாவில் அ.த.க. பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதையொட்டி அப்பகுதி மக்கள் அண்மையில் கெருடாவில் கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூசை ஒன்றை நடத்தினர்.

இந்தப் பாடசாலையை மீண்டும் ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளருக்கு விசேட பூசையில் கலந்துகொண்ட மக்கள் பாராட்டுத் தெரிவித்தனர். (எ-117)

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலய அனுசரணையுடன் நடத்தும் திருநாவுக்கரசர் குருபூசை விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்து அபிவிருத்தி உதவியாளர் (வலிகாமம்) த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், ஆசியுரையை ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சபா வாசுதேவசர்மாவும் வாழ்த்துரையை மானிப்பாய் மருதடி அறநெறிப் பாடசாலை அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன், ஆலய பரிபாலன சபைத் தலைவர் சோ.தெய்வேந்திரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

சிறப்புச் சொற்பொழிவாக 'சிவத்தொண்டே பெரும்பேறு' என்னும் தலைப்பில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கந்த சத்தியதாசன் உரை நிகழ்த்துவார். (எ-202)

## ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடம்

தீவகக் கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்வி, விசேட கல்வி, தகவல் தொழில்நுட்பம், தொழில்நுட்ப பாடம் ஆகிய பாடநெறிகளுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை 30ஆம் திகதிக்கு முன்னர் தீவக வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ)

## சிறுதானிய பயிர்களுக்கு மழையால் பயன்

வலி.தென்மேற்குப் பிரிவில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை இப்பகுதி வயல் காணிகளில் செய்கை பண்ணப்பட்ட எள்ளு, பயறு, சணல் ஆகிய சிறுதானியப் பயிர்ச் செய்கைக்கு நல்ல வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - கட்டாக்காலி ஆடு, மாடுகள் சிறுதானியச் செய்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். மானிப்பாய் மேற்கு மற்றும் கட்டுடை, சண்டிலிப்பாய் பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட சணல் பயிர்களை அடிக்கடி கட்டாக்காலி மாடுகள் புகுந்து மேய்ந்து [illegible] (ஓ-135)(19)


**Jaffna Study Center of Colombo Theological Seminary**

**கொழும்பு இறையியல் கல்லூரி, யாழ்.நிலையம்**

*கிறிஸ்தவ ஊழியர் பயிற்சிநெறி*

**பாடம்:** கிறிஸ்தவ ஊழியரின் வாழ்க்கையும் ஊழியமும் (Life & Ministry of Christian Worker)

**விரிவுரையாளர்:** Pas.Cedric Beno (Madras)

**திகதி:** 24 - 28 ஏப்ரல் 2006 காலை 9 - 2 மணி வரை

**இடம்:** C.T.S. Jaffna Center, 32/1, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்.நகர். (49616)(32-14-17)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

*அன்னையின் அணைப்பில்* 24 - 05 - 1928



*கர்த்தரின் மடியில்* 26 - 03 - 2006

கர்த்தருக்குள் நித்திரையடைந்த, எமது குடும்பத் தலைவர்

அமரர் **இளையதம்பி ஹென்றி ஞானரத்தினம்**

*அவர்களின்*

*நிலைவு நாளையொட்டி 23.04.2006 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஜெப ஆராதனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*'ஞானபதி இல்லம்,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (49641)(21-32-14-17)

**குடும்பத்தினர்.**



## 31ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 08 - 07 - 1914



விண்ணில் 22 - 03 - 2006

**திருமதி இராசையா தேவரத்தினம்**

இப்பாரினில் வாழ்ந்தது போதுமென்றோ
விழிமூடி எம்மை விழிநீர் சொரியவைத்து
பிரிந்தது ஏதுவோ?
எம்முள்ளம் உங்களால் உயிரின்றி உதறுகிறது
பிறப்பவர் இறப்பவர் தானென்று - எண்ணியோ
எம்மனம் நிறைவடைவதோ? - இல்லை
ஏதெனினும் உங்கள் வாழ்வும் நினைவும்
எமைவிட்டு உங்கள் உயிர்போல் நீங்கிடுமோ?
இறையருள் வேண்டி நாம் உங்களுக்காய்
இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் நினைவாக இன்று (21.04.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்திலும் பிற்பகலில் பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி திருப்பலியிலும் பங்குபெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தாவத்தை,
இளவாலை. (49640) (24-32-17-14)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையின் மகத்துவத்தை உணர்த்தும் திருநாவுக்கரசு நாயனாரின் சிவத்தொண்டு

**சமயகுரவர்களின் மக்கள் சேவையே மகேசன் சேவையென வாழ்ந்துகாட்டியவர் திருநாவுக்கரசு நாயனார். அவரது குருபூசைதினம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

திருமுறைப் பாடல்களில் திருநாவுக்கரசு நாயனாரின் பாடல்கள் தனித்துவமானவை. கவிதைகள் கவிஞனுடைய இயல்பையும் வெளிப்படுத்துவனவல்லவா?

திருநாவுக்கரசர் உலகியலில் பல்வகைப்பட்ட துன்பங்களை எதிர்கொண்டவர். இதனாலோ என்னவோ அவரது பாடல்கள் எமது மனங்களை ஆற்றுப்படுத்தவனவாக அமைந்துள்ளன.

இறைவன் திருவடி மீது மாறாத சிந்தை கொண்ட திருநாவுக்கரசு நாயனார் மக்கள் சேவையூடாக இறைவனைக் கண்டார்.

இவர் பாடிய திருப்பதிகங்கள் 4 ஆயிரத்து 900 ஆயினும் தற்போது 312 பதிகங்களே கிடைக்கக் கூடியனவாக உள்ளன. இவரது பாடல்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன.

திருமுனைப்பாடி நாடு இவர் பிறந்த நாடு. பெண்ணை ஆறு பாய்ந்து வளம் பெருக்கும் இந்நாட்டில் திருவாமூர் என்ற திருவூர் உள்ளது. இங்கு புகழனார் - மாதினியார் என்ற அறம் வளர்க்கும் உத்தமர்கள் இருவர் வாழ்ந்தனர். இவர்களது முதற் குழந்தை திலகவதியார். இவரைத் தொடர்ந்து அவதாரம் செய்தவர் மருணீக்கியார் என்ற பிள்ளைத் திருநாமம் கொண்ட திருநாவுக்கரசர்.

தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் நல்லவர் இருப்பதாலேயே ''உண்டால் அம்ம இவ்வுலகம்'' என்று இவ்வுலகு வாழ்வதாகப் புறநானூற்றுப் புலவன் உரைத்துள்ளான். அஞ்ஞான இருளை நீக்க வந்த ஒளியாக, பிறர்க்கென வாழும் பெருமகனாக அப்பர் பெருமானின் அவதாரம் அமைந்தது.

இளமைக் காலத்தில் யாரும் எதிர்கொள்ள நேராத பேரிடருள் நாயனார் சிக்கினார். பெற்றோரை இழந்தார். தமக்கையாரான திலகவதியாருக்கு நிச்சயிக்கப்பட்ட மணமகன் கலிப்பகையனார் போர்க்களத்தில் வீடு பேற்றை அடைந்தார். இத்தொடர் நிகழ்ச்சிகளால் மனமொடிந்துபோன மருணீக்கியார் வேற்றுச் சமயத்துள்

ஞானக்கதிர்

புகுந்தார். அங்கு மன ஆறுதல் கிடைக்கும் என்பது இவரது நப்பாசை. ஆயினும், தம்பிக்காகவே குறிக்கோளுடன் வாழ்ந்த தமக்கை சமய இறுக்கத்தைப் பேணி சைவ சமயத்தின் வழி வாழ்ந்தார்.

ஒரே தம்பியார் தம்மைவிட்டு அகன்ற பின் திருவாமூரிலிருந்து புறப்பட்டு கெடில்நதியால் வளம் பெறும் அதிகை வீரட்டானரை நண்ணி திருக்கோயில் பணிகளைத் திலகவதியார் மேற்கொள்கிறார்.

*''புலர்வதன்முன் திரு அலகு பணிமாறி புனிறு அகன்ற*
*நலம்மலி ஆன் சாணத்தால் நன்கு திரு மெழுகு இட்டு*
*மலர் கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்து அமைத்துப்*
*பலர் புகழும் பண்பினால் திருப்பணிகள் பல செய்தார்''*

(பெரியபுராணம் - 1314)

இங்கு தமக்கையார் செய்த கோவில் திருப்பணிகள் எமக்கெல்லாம் பாடமாக அமைவன. இவற்றையே திருநாவுக்கரசர் 'நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா' என்ற தேவாரத்திலும் குறிப்பிடுகிறார்.

திருக்கோயில் பலர் கூடுமிடம். இதனால், பல மாசுகள் சேரும் வாய்ப்புள்ள இடம். இந் நாள்களைப் போல் சிமெந்துக் கட்டடங்கள் இல்லாத காலம் அது. சுற்றாடலைச் சுத்தப்படுத்தும் பொருட்டு அலகிடல், சாணத்தால் மெழுகிடல் என்பன மேற்கொள்ளப்பட்டன. காற்று மாசடைதலைத் தவிர்க்க சாம்பிராணி, குங்குலியம், சூடம் என்பவற்றைப் பயன்



படுத்தினார்

இவற்றைக் கையாண்டு மக்கள் சேவை ஆற்றும் மாண்பை திருநாவுக்கரசர் தேவாரமும் சேக்கிழார் பெரிய புராணமும் எடுத்துரைக்கின்றன.


மக்கள் தொண்டர்களுக்கான அடிப்படைத் தகைமை உண்மை பேசுதல், தர்ம நெறி வாழுதல் என்பனவாகும். நாவுக்கரசரைப் பொறுத்தவரையில் இளமையில்

**ச.லலீசன்**
ஆசிரியர்
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி - புத்தூர்

மேற்காட்டிய சமூகப் பணிகளை மேற்கொண்டவர். முதுமையில் உழவாரப் படையாளியாகவே காட்சி தருகிறார்.

*''கந்தை மிகையாம் கருத்தும் கை உழவாரப் படையும்''* (பெரியபுராணம் - 2173) என்று சேக்கிழார் பாடுவதன் ஊடாக அப்பர் பெருமானின் முழுத் துறவு நிலை எமக்குத் தெரிகிறது.

## தெய்வீக ஸ்தலங்களில்...




நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவின்போது அடியவர்கள் தேரை இழுத்துவருவதைப் படத்தில் காணலாம். (படம்: வலி.கிழக்குச் செய்தியாளர்)



ஆனைக்கோட்டை, கூழாவடி முன்மாதிரிக் கிராம இளைஞர் குழுவினர் ஆனைக்கோட்டை புளியங்கண்டுப் பிள்ளையார் ஆலயச் சுற்றாடலை சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர். இதன்போது எடுக்கப்பட்ட படம் இது. (படம்: நவாலிச் செய்தியாளர்)







வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா கடந்த 10ஆம் திகதி நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: ஒளி அதிரன்)

## ஊர்காவற்றுறைப் பிரதேச விளையாட்டுவிழா சனி, ஞாயிறு தினங்களில் அந்தோனியார் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,ஏப்.21

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவிஅரச அதிபர் க. ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் இ.றொகான் இராஜசிங்கம், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் கே.கணேசபிள்ளை ஆகியோரும் கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண.பிதா ஜேசுதாசன் அடிகளாரும் கலந்துகொள்வர்.

இறைவணக்கம், மங்கள விளக்கேற்றல், ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல் என்பனவற்றுடன் விளையாட்டு நிகழ்வுகள், விருந்தினர்கள் உரை, பரிசளிப்பு என் பன இடம்பெறும். (எ) (24)

## நாவலர் மண்டப சொற்பொழிவில் இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.21

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலையின் ஆதரவுடன் நடத்தும் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் 144ஆவது சொற்பொழிவு இடம்பெறும்.

இந்து அபிவிருத்தி உதவியாளர் (வலிகாமம்) த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வாழ்த்துரையை கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

சைவவித்தியாவிருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்களின் புஸ்பாஞ்சலி, நடனம், பண்ணிசைக் கச்சேரி ஆகிய கலை நிகழ்வுகளும் 'ஆறுமுகமான பொருள்' என்னும் பொருளில் சுயேந்தினியின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (எ-202) (24)

## வேலைத்திட்டங்களின் விவரங்கள் திரட்டல்

தென்மராட்சி,ஏப்.21

தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பான விவரங்கள் அரச திணைக்களங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

திணைக்களங்கள் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மூன்றாம் திகதி நடைபெறவுள்ள பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ்.அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள் கலந்துகொள்ளவிருப்பதால் அன்றைய தினம் திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்படும் வேலைத்திட்டங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8-[illegible])

## திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஏப்.21

மாதம் ஒரு கோயில் ஒரு திருமுறை என்ற அடிப்படையில் அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் திருமுறை முற்றோதல் இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் வண்ணை.கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் [illegible] (எ) (24)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.21

கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக்கழகம் ஜி.சீ.ஈ. உயர்தர கணித, விஞ்ஞான பாட மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கை நடத்தவுள்ளன.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் இணைந்த கணிதம், உயிரியல் ஆகிய பாடங்களுக்கான கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. மாணவர்களுக்கு இலவசமாகப் பாடக்குறிப்புகளும் வழங்கப்படும் எனக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-202) (24)

## புங்குடுதீவு அந்தோனியார் ஆலய உயர்திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.21

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய உயர்திருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 3 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி பிற்பகல் 5.30 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை வழிபாடு, நற்கருணைப் பவனி, அருளாசி என்பன இடம்பெறும். மறுநாள் காலை 8.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து தேர்ப்பவனி, அருளாசி என்பனவும் இடம்பெறும். (எ-202) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று செயற்றிறன் அரங்க ஏற்பாட்டில் களப்பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.21

உள சமூகப் பணிகளில் வெளிப்பாட்டு முறைகள் என்ற தலைப்பிலான களப் பயிற்சி ஒன்று இன்று காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்.நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

செயல்திறன் அரங்க இயக்கத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந்தப். பயிற்சியில் தொடக்கவுரையை செயல்திறன் அரங்க இயக்க இயக்குநர் தே.தேவானந்த் நிகழ்த்துவார். வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன் 'உள சமூகப் பணியில் வெளிப்பாட்டு முறைகள்' என்னும் தலைப்பில் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து வைத்தியகலாநிதி எஸ்.சிவயோகன் தலைமையில் முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெறும் முதலாது அமர்வில் 'உளசமூகப் பணியில் விளையாட்டுக்கள்' என்ற தலைப்பில் சாந்தியகத்தைச் சேர்ந்த வ.அனவரதனும் 'நடன அசைவுகள் ஊடான உளச்சிகிச்சை' என்னும் தலைப்பில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி பா.மேனகாவும்-

அரங்க செயற்பாடுகள் ஊடான உள சமூகப் பணிகள்' என்னும் தலைப்பில் செயல்திறன் அரங்க இயக்க இயக்குநர் தே.தேவானந்தும் ஆற்றுப்படுத்தல் பணியில் அரங்கத் திறன்கள்' எனும் தலைப்பில் ஆசிரியர்வள நிலைய முகாமையாளர் த.சிவகுமாரும்கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ள இரண்டாவது அமர்வில் 'சித்திரம் வரைதல் ஊடான உளச்சிகிச்சை என்னும் தலைப்பில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி க.யசோதராவும் - 'பிணி தீர்க்கும் பணியில் எடுத்துரைப்பு முறைகள்' என்னும் தலைப்பில் மாவட்ட வைத்தியசாலையின் பல்துறை சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த ந.றவிராஜும் 'உளத்தளர் நிலைக்கான பயிற்சிகள்' எனும் தலைப்பில் யாழ்.பேதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி இ.சிவசங்கரும் -

'பக்தி மார்க்கம் ஒரு வெளிப்பாட்டு முறைமையா? என்னும் தலைப்பில் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் கருத்துரை வழங்வுள்ளனர்.

(எ-203)

# வளர்ப்பு நாய்களுக்கு 4ஆம் கட்ட தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி நான்காவது கட்டமாக ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் திகதி,நேரம் ,இடம் பற்றிய விவரங்கள் வருமாறு:

எதிர்வரும் 26ஆம் திகதி நல்லூர் பிரதேசத்தில் காலை 8 மணி முதல் முற்பகல்10.30 மணி வரை முருகன் சனசமூகநிலையம்.முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 12.30 மணி வரை வன்னி பொது மன்றம். பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணிவரை மூத்த விநாயகர் சனசமூக நிலையம் -

எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 8 மணி முதல் முற்பகல் 10.30 மணி வரை கொன்றலடி சனசமூக நிலையம்.முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 12.30 மணி வரை ஜனசக்தி சனசமூக நிலையம்-

பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணி வரை திருநெல்வேலி சிவன் கோயில் முன்றில்-

28 ஆம் திகதி அரியாலைப் பிரதேசத்தில் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை சரஸ்வதி சனசமூக நிலையம் - பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணி வரை காந்தி சனசமூக நிலையம் என்பனவற்றில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படும் என்று யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாஸன் அறிவித் துள்ளார்.

(எ-204)

# சமுர்த்தி நிவாரண முத்திரை விநியோகம்

தென்மராட்சி,ஏப்.21

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளுக்கான சமுர்த்தி நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தந்தப் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் ஜனவரி தொடக்கம் ஜூன் வரையிலான காலப் பகுதிக்குரிய நிவாரண முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளைஜனவரி மாத முத்திரைக்குரிய நிவாரணப் பொருள்கள் அந்தந்தப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

(எ-117)


## வேல்ஸ் இளவரசி வைத்தியசாலை

24 மணிநேர சேவையை மேம்படுத்த பின்வரும் சேவைகளுக்கு தகுதியானவர்கள் தேவை

* இணைப்பாளர் (Co-ordinator)
* நிர்வாக உத்தியோகத்தர் (Administrative Officer)
* பதிவு செய்யப்பட்ட மருந்து கலவையாளர் (Registered Pharmacist)
* வரவேற்பாளரும் இயக்குநரும் (Receptionist cum Telephonist)
* பதிவு செய்யப்பட்ட தாதியர் - ஆண்/பெண் (Registered Nurses)
* தாதிப் பயிலுநர் - ஆண்/ பெண் ( Nursing Trainees)

விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வி மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் ஞாயிறு (23.04.2006) காலை 9.30 -12.00 மணி வரை நேர்முகத்தேர்வுக்கு சமுகந்தரவும்

சனி, ஞாயிறு தினங்களில் இலவச இரத்தப் பரிசோதனையும், ஆலோசனையும்

வைத்திய இயக்குநர்,
132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(49646) (21.11.15)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பஸ் நிலையம் முன்பாக, ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளும் கொண்ட ஒரு பரப்புக் காணியுடன் ஒரு மாடிக் கடைக் கட்டடம் (முன்புறம், பின்புறம் பாதைகள் கொண்டது) உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:
071 3056177

(சி/49032) (24.32.11.15)

## கடின வேலைக்கு உகந்தவை

Einhell®

With German Technology




முகவர்கள்

சென்ற் அந்தனீஸ் ஹாட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்

காட்சியறை : 524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 2324261-5, 2337283-5, 2436779 பெக்ஸ் : 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப் பொருள்கள் வர்த்தகர்.
95/1. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், மானிப்பாயில் இயங்கும் ''ஏலிம்'' சிறுவர் இல்லத்திற்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகுதியுடையவர்கள் தெளிவான விலாசம், தொலைபேசி இலக் கத்துடன் கூடிய சுயவிவரக் கோவையைக் கீழ்க்காணும் விலா சத்திற்கு எதிர்வரும் 24.04.2006இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

The Administrator,
No.19/1, Beach Road,
Mount Lavinia.

The Administrater,
'Elim' Children's & Voluntary Home
Memorial School lane, Manipay.

பதவி வெற்றிடங்கள்:

1. ஆண் பராமரிப்பாளர் (வயது 40 இற்கு மேல்)
2. சமையற்காரர் (வயது 40 இற்கு மேல்)
3. பூந்தோட்ட பராமரிப்பாளர் (வயது 35 இற்கு மேல்)
4. கணக்காளர் (வயது 45-55இற்கு இடையில்)
5. களஞ்சியக் காப்பாளர் (30-45இற்கு இடையில்)

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:
0777681144, 0115524388, 0777913873
FAX: 0115524386

(49650) (24.15.11.32)

## மாபெரும் கருத்தரங்கு

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளரின்

A/L 2006
தமிழ்

விரிவுரையாளர்கள்:
திரு.பரா. ரதீஸ், திரு.வேல். நந்தகுமார்
காலம்: இன்றும் நாளையும் (காலை9 மணி)
அனுமதி அட்டைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

ராகவன் கல்வி நிலையம் - சங்கானை.

(சி/49031)


## மரண அறிவித்தல்



### விசுவலிங்கம் வைரமுத்து

(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)

நாகலிங்கம் முதலியார் ஒழுங்கை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் வைரமுத்து அவர்கள் நேற்று (20.04.2006) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாகலிங்கம் முதலியார் ஒழுங்கை,
பருத்தித்துறை. (49648)(32-11-15)

தகவல்:
பேரப்பிள்ளைகள்.

## வாழ்த்துகின்றோம்



### திரு.கிருஷ்ணர் குணரத்தினம்

தனது 50ஆவது பிறந்ததினத்தை
இன்று (21.04.2006)
வெள்ளிக்கிழமை கொண்டாடும்
திரு.கிருஷ்ணர் குணரத்தினம்
இன்னும் பல்லாண்டுகள் சகல நலன்களும்
செல்வங்களும் பெற்று, இப்புவியில்
வாழ மனமார வாழ்த்துகின்றேன்.

"சிவஸ்தான்",
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

கனக கேசவன், J.P.U.M
சட்டத்தரணி.

(சி/49026)(32-11-15)

# பனை வெல்லம் விற்பனைக்கு

தென்மராட்சி,ஏப்.21

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்க வெல்ல நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லக் கட்டிகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

பனை வெல்லம் தேவைப்படுவோர் சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள சங்க தலைமையகத்தில் அல்லது மீசாலை வடக்கில் உள்ள வெல்ல உற்பத்தி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமென சங்கப் பொது முகாமையாளர் வே.கிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

(எ-117)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2006

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட சந்தைகள் இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 01.05.2006 இலிருந்து 31.12.2006 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 26.04.2006 பிற்பகல் 15.30 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 27.04.2006 நண்பகல் 12 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 27.04.2006 பிற்பகல் 15 மணிவரை

மேலதிக விவரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம் | வற்வரி |
|---|---|---|---|---|
| உடுப்பிட்டி சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 20,500/- | 3,000/- | 250/- | 37/50 |
| உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 2,000/- | 500/- | 250/- | 37/50 |
| அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 114000/- | 3,000/- | 250/- | 37/50 |
| அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக் கடை | 13,300/- | 500/- | 250/- | 37/50 |
| நெல்லியடிச் சந்தை கோழி இறைச்சிக் கடை | 10,000/- | 500/- | 250/- | 37/50 |
| நெல்லியடிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 26,800/- | 500/- | 250/- | 37/50 |
| கோவிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 5,400/- | 500/- | 250/- | 37/50 |

திரு.சி.வே.குலநாயகம்,
செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
18.04.2006.

(சி/49030)(32-11-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் இலவச கருத்தரங்கு

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனங்களின் இளைஞர் சபையின் ஏற்பாட்டில்
பிரபல ஆசிரியர்களால் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு

இடம்: பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்
166/5 சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக.
நேரம்: காலை 9.00 மணி முதல்

21.04.2006 (வெள்ளி) உயிரியல் (இன்று) திருமதி.S.சுரேந்திரா, திரு.A.பாஸ்கரன்
22.04.2006(சனிகாலை)புவியியல், P.சிவசித்திரா
22.04.2006(சனி1.30pm)இரசாயனவியல்,N.கலா
23.04.2006(ஞாயிறு)வணிகக்கல்வி த.பாலகிருஸ்ணன்

பங்கு பற்றும் அனைத்து மாணவர்களுக்கும் மாதிரி வினாத்தாள், விடைகள்,
முக்கிய பாடக்குறிப்புகள் (hand out) என்பன இலவசமாக வழங்கப்படும்.

## சங்கானையில் சோதனை

சங்கானையில் பொலீஸாரும் படையினரும் இணைந்து வீடுவீடாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீட்டில் உள்ளோர் பற்றிய விவரங்களைப் பதிந்து கொண்டதுடன் புதிதாக யாராவது வந்து தங்கினால் தங்களுக்கு அது பற்றி தகவல் தருமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

## தனியார் பாதுகாப்புச் சேவை
## போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம்

01.07.2006 தொடக்கம் 30.06.2007 வரையான காலப் பகுதிக்குத் தனியார் பாதுகாப்புச் சேவை வழங்குவதற்குப் பின்வரும் தகுதியுடையோரிடமிருந்து கேள்விகள் கோரப் படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் மீளளிக்கப்படாத 250 ரூபா செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 05.05.2006 முற்பகல் 10 மணிவரைக்கும். கேள்விகள் உடனே திறக்கப்படும். அத் திகதிக்குப் பின்னர் வரும் கேள்விப் பத்திரங்களும் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

1. அண்மையில் பாதுகாப்பு அமைச்சில் பெறப்பட்ட பாதுகாப்புச் சேவை அனுமதிப்பத்திரம்.
2. சேவை முன்னனுபவம்.
3. நிதி நிலைமை தகைமை ( 6 மாத கால வங்கிப் பற்றும் , வருமான பற்றுச் சீட்டும்).

மேலதிக விவரங்களை வைத்தியசாலையின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி அ.எ.ஞானஜோதி
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சு-49033)
(18-34-49)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம் விளையாடுகிறது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் முற்பகல் 11 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதுகின்றன. (ஓ-190)

* * *

யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் ரெக்கி கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நாளையும் நாளைமறுதினமும் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில்பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்வருமாறு:-

நாளை காலை 9.30 மணி - ஜொலிஸ்ரார் வி.க. எதிர் பற்றிசியன் வி.க.

நாளை மறுதினம் முற்பகல் 9.30 மணி - பற்றிசியன் வி.க. எதிர் ஒல்கோட் வி.க.

நாளை மறுதினம் யாழ். மத்திய கல்லூரி மைதானம் 9.30 கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி.க. எதிர் ஜொனியன்ஸ் வி.க. (ஓ-190)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலி



பிறப்பு 13 - 07 - 1934
இறப்பு 22 - 03 - 2006

### திருமதி ஆறுமுகத்தான் இலட்சுமி

பாசத்துடன் அரவணைத்து
பண்புடனே வளர்த்தீர்கள்
ஊர் போற்ற நாம் வாழ
பார்த்து மகிழ்ந்தீர்கள் - இன்று
ஏக்கத்துடன் நமை வாழவிட்டு
எங்கு தான் சென்றீர்கள்

கைதடி கிழக்கு,
கலைநகர்.

(49602)(18-34-49)

சின்னத்தம்பி
(மகன்).

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினால்
யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்
கோதுமை மா வழங்குவதற்கான
கேள்வி கோரல் - யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் - 2006

1) யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு கீழ்க் குறிப்பிட்ட அளவிலான மெற்றிக்தொன் கோதுமை மா விநியோகிப்பதற்கான கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. மா பின்வரும் அடிப்படையில் விநியோகம் செய்யப்படல் வேண்டும்.

| விநியோகிக்க வேண்டிய மாதம் | அளவு |
|---|---|
| 2006 யூலை | 400 Mt. |
| 2006 ஓகஸ்ட் | 400 Mt. |
| 2006 செப்ரெம்பர் | 400 Mt. |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 24.04.2006 ஆம் திகதி தொடக்கம் 09.05.2006 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

2) கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) மெற்றிக்தொன் ஒன்றிற்கு (01Mt.) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும்.( விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3)பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 10.05.2006 ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு முன்பாக சேர்க்கவும்.அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகள் கோரியவர் அல்லது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

4)நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி' என எழுதப்பட வேண்டும்.

5)ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 வீதம் மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.(விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

6)கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30 நாள்கள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்
தலைவர்/ அரச அதிபர்
மாவட்ட கேள்விச் சபை/ மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.
20.04.2006

(சு-49035)
(18-34-49)

## வாகன சாரதி தேவை

45 வயதிற்கு மேற்பட்ட முன் அனுபவமுள்ள வாகன சாரதி தேவை.

தொடர்பு:
14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலுக்கு அருகில்
யாழ்ப்பாணம்.

(49655)(18-34-49)

## விற்பனைக்கு

5 SRI மொறிஸ் மைனர் கார், NPJC 90 கஸ்டம் கொண்டா சுப்பர் கப் வாகனங்கள் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு நேரில் வரவும்.

தொடர்பு:
14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
பெருமாள் கோயிலுக்கு அருகில்
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0773164595

(49655)(18-34-49)

## தேவை

Press இல் வேலைசெய்த முன் அனுபவமுள்ள,
Typesetrer
Cutting Machine இல்
வேலைசெய்யக்கூடிய
Binder ஆண் தேவை

தொடர்புகொள்ளவும்:
அமெரிக்கன் சிலோன் மிஷன் Press,
464,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 9102

(49651)(18-34-49)


## ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
10.30,2.30,6.30,9.30 டிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

## நாகஸ்ஸ் சுன்னாகம்

ஜீவா, சந்தியா மற்றும் பலர் நடித்த
டிஸ்யும்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த
கள்வனின் காதலி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆரோக்கியதாசன் இரஞ்சிதம்



யாழ்.சுண்டுக்குளி சஞ்சுவாம் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ஆரோக்கியதாசன் இரஞ்சிதம் அவர்கள் நேற்று(20.04.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் துரை ஆரோக்கிதாசன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சீமான்பிள்ளை (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்) - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கலைஞர் சலமோன் பிரான்ஸிஸ் துரையப்பா - றோசலின் தம்பதியரின் அன்பு மருமகளும் திருமதி மேபிள் யோசவ், திருமதி றோஸ் திசவீரசிங்கி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். புனித சாள்ஸ் ம.வி.), அமரர் திருமதி றுக்குமணி மனுவேற்பிள்ளை, P.J.சீமான்பிள்ளை (M.Sc., Australia), அமரர் வைத்திய நிபுணர் Dr.S.வேதநாயகம்(U.K.) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற திருமதி எலிசபேத்து அந்தோனிப்பிள்ளை, திருமதி திரேசம்மா எட்வேட், பிரான்ஸிஸ் மைக்கல் (ஜேசுவின் தாயின் ஊழியன்), திருமதி தங்கச்சியம்மா அருள்நாயகம், திருமதி பார்பறா சீவரத்தினம், அருட் சகோதரி மேரி மக்டலின் பிரான்ஸிஸ் (R.G.S. - St.Bridget's Conbent Colombo - 7), அமரர் Dr.இம்மானுவேல் யோசவ், C.E.திசவீரசிங்கி பொஸ்ரின் மனுவேற்பிள்ளை(Rtd.Accountand, CEB Colombo),திருமதி சீமான்பிள்ளை இரஞ்சிதம் (சட்டத்தரணி, Australia), திருமதி மேரியன் வேதநாயகம் (U.K.) ஆகியோரின் மைத்துனியும் திருமதி M.S.ரதி நாகலிங்கம் (Canada), JFJ.யோசவ் (ஜேர்மனி),Dr.புளோறின் சக்திவேல் (mawanella),Dr.செறின் பாலசிங்கம் (MOH-Wattala), திருமதி உஷானி மரியதாஸ் (Canada) ஆகியோரின் சிறிய தாயும் S. கஜன், S.ஜனனி, S.வாசுகி (Australia), Dr.நற்றாலி வேதநாயகம் (U.K.), B.A.அருளானந்தம், A.ஜேக்கப், A.S.தேவதாஸ், A.F.தம்பிநாயகம், E.F.சேவியர், E.L.-புவிராஜசிங்கம், திருமதிகள் றீற்றா பாக்கியநாதன், சாந்தினி சுரேஸ், அமரர் செல்வி சறோ மைக்கல், அருள்நேசன் மைக்கல், திருமதி கிறிஸ்ரிராஜா மரீனா, திருமதி ஈழராணி நிமால், திருமதி ஜெயந்தி அருள்நாதன், அன்ரன் தேவநாயகம், A.துரைநாயகம், A.தனிநாயகம், A.ஜெயநாயகம், பசில் செல்வநாயகம், சீவரெட்ணம் ஜெயசீலன் (ஜேர்மனி), S.ஜெயக்குமார் (சுவிஸ்), S. ஜெயந்தன் (கனடா), திருமதி ஜெயச்செல்வி நவரட்ணம்(Abudavi) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(22.04.2006)சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து திருப்பலிக்காக புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு யாழ். புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.60, கோயில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
துரை ஆரோக்கியதாசன்(கணவன்)
( பிரான்ஸிஸ் செவ்றோஜ்)
முன்னாள் பிரதி அதிபர் பலாலி ஆசிரிய கலாசாலை

(49656)(18-34-49)

### பாலச்சந்திரன் றெஜினோட் றொசான்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத் தெருவை வதிவிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் றெஜினோட் றொசான் அவர்கள் கடந்த 18.04.2006 செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரன் - நவமணி (தாதிய உத்தியோகத்தர், இணுவில்) தம்பதியரின் அன்பு மகனும் தர்மலிங்கம் (முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்), பொன்னம்மா(நெடுந்தீவு, 12 ஆம் வட்டாரம்) ஆகியோரின் அருமைப் பேரனும் குமாரவேலு (பாண்டியன் குளம்), கனகம்மா (ஆசிரியை, அல்லைப்பிட்டி), முருகேசு (முன்னாள் விளையாட்டு உத்தியோகத்தர், நெடுந்தீவு), காலஞ்சென்ற கோமளம் ஆகியோரின் பேரனும் அந்தோனிப்பிள்ளை, செல்வரஜனி(பிரான்ஸ்), செல்வரட்ணம் (தெல்லிப்பழை) ஆகியோரின் பெறாமகனும் செல்வநாயகம் சந்திரவதனி, செல்வரவீந்திரன், நளினி(கனடா), சுரேஸ், மேருமதி (லண்டன்), ரமேஸ், சித்ரா(ஜேர்மனி), மேரி, பேளி(கனடா) ஆகியோரின் மருமகனும் டிலோஜினாலின்(பிரான்ஸ்) அண்ணாவும் ஜெயந்தினி, நிமலராஜா, ஜெயச்சந்திரன், நிருஜா, நிலானி, நிரோஜன், சுகேசன், மயூரன் (கனடா), பிரியா, திவ்யா(லண்டன்), வித்யா, சேதுஸ் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2006) சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொய்யாத்தோட்டம் புதிய வீதியில் உள்ள 9/1, பால்குளம் லேன் இல் உள்ள திருமதி ஆலாலசுந்தரேசன் (அம்மம்மா) அவர்களது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த மிசன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49656)(18-34-49)

இல.9/1, புதிய வீதி,
கொய்யாத்தோட்டம்,யாழ்ப்பாணம்.

தகவல்:
தாய், உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் கருணாகுழுவினர் நடத்தும் பயிற்சி முகாம் காட்சிகள் ஆஸி. ரீ.வியில்!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில், இராணுவ ஒட்டுப் படையான கருணா அணியினரின் முகாம் ஒன்று இயங்குவதை காட்டும் வீடியோ படக் காட்சிகளை ஆஸ்திரேலியாவின் 'எஸ்.பி.எஸ்' என்கின்ற விசேட ஒலி, ஒளிபரப்புச் சேவை அண்மையில் ஒளிபரப்புச் செய்துள்ளது.

'டேற் லைன்' என்ற விசேட நிகழ்ச்சியின் முற்பகுதியில் கருணா குழுவினரின் இந்தப் பயிற்சி முகாம் அம்பலப்படுத்தப்பட்ட அதேவேளை, பிற்பகுதி ஒளிபரப்பில் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டபாய ராஜபக்ஷவுடனான பேட்டியும் இடம் பெற்றிருக்கிறது.

இந்தப் பேட்டியில் அவர் இராணுவ ஒட்டுப் படைகள் எதுவும் கிடையாது என்று மறுத்திருக்கிறார்.

இந்த ஆஸி. ஒளிபரப்புச் சேவைக்காக ஏரன் லூயிஸ் என்ற ஊடகவியலாளர் ''நான் மட்டக்களப்பில் வைத்து இவர்களை நேரிலேயே சந்தித்திருக்கிறேன். இதற்கு என்ன சொல்லுகிறீர்?'' - என்று இந்தப் பேட்டியின் போது பாதுகாப்புச் செயலாளரிடம் கேட்கப்பட்டுள்ளது.

அதற்கு அவர் பட்டென்று ''புலிகள் பாசாங்கு செய்து நடித்திருப்பார்கள். தங்கள் முகாமுக்கு உங்களை அழைத்துச்சென்று நாங்கள் தான் கருணா அணியினர். எமது முகாம் இதுதான் என்று காட்டியிருப்பார்கள்'' என்று சிரித்துக்கொண்டே பதிலளித்திருக்கிறார் பாதுகாப்புச் செயலாளர்.

''இராணுவ ஒட்டுப்படைகள் என்று இவர்களை அழைக்கலாமா? இல்லையா? என்பது ஒரு புறம் இருக்கட்டும். ஆனால், ஒன்று மட்டும் உண்மை இப்படியானவர்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் காண்பது அதிக கஷ்ரமான விடயமில்லை. கருணா குழுவின் முகாமுக்கு நான் சில பேரங்களுக்கு பின்னரே போக முடிந்தது? என்றும் - ஏரன் லூயிஸ் கூறியிருக்கிறார்.

கருணா அணியின் அரசியல் பிரிவுத் தலைவர் என்று தன்னை இனங்காட்டிக் கொண்ட பிரதீப் என்பவர் தங்களது அணி அரசியல்; நிதி, ஆயுத, உளவுத்துறை எனப் பல்வேறு பிரிவுகளாக இயங்குவதாகத் தெரிவித்திருக்கிறார். இதனையும் ரி.வி.ஒளிபரப்பியிருக்கிறது. டேற்லைன் நிகழ்ச்சியில் புதனன்று இரவு ஒளிபரப்பானது.

(ஒ-14-25)

## திருமலை மாணவர்கள் கொலை: சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவு

கடந்த ஜனவரி 2 ஆம் திகதி திருகோணமலை நகரின் கடற்கரைப் பகுதியில் வைத்து ஐந்து தமிழ் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து முழுவிசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பொலீஸாருக்கு (சி.ஐ.டியினருக்கு) சட்டமா அதிபர் உத்தரவிட்டிருக்கின்றார்.

இந்தப் படுகொலைச் சம்பவம் குறித்து எவருக்கு எதிராகவும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்துக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் தொடர்புகள் இருப்பதாக ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தப் பின்னணியில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) என்ற அமைப்பு இக் கொலைகள் தொடர்பான உள்வீட்டு விவகாரங்களைத் தனது வழக்கமான அறிக்கையில் விவரமாக அம்பலப்படுத்தியிருக்கின்றது. இக்கொலைகளுக்குத் திட்டமிட்ட அதிகாரி, கொலைகள் நடந்த விதம், சம்பந்தப்பட்ட துருப்பினர் போன்ற விடங்கள் அந்த அறிக்கையில் விலாவாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கையை அடிப்படையாகவைத்து விசாரணைகளை ஆரம்பித்து குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி சொலிஸிட்டர் ஜெனரல் ஸி.ஆர்.டி.சில்வா நேற்று குற்றப் புலனாய்வுப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார் என அறியவந்தது. (க)

## படுகொலைகளை கண்டிக்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

''யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு புத்தூர், வாதரவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ள படுகொலைகளையும் நேற்றிரவு வவுனியா மகா இறம்பைக் குளத்தில் ஏற்பட்ட படுகொலைகளையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்''

- இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மிக அண்மைக் காலமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மனிதப் படுகொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறான அனைத்து மனிதப் படுகொலைகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக நிரந்தர சமாதானத்தை எட்டக்கூடிய பேச்சுகள் உடன் ஆரம்பிக்கப்பட வேணடும். மனிதப் படுகொலையின் மூலம் எதையும் சாதிக்க முடியாதென்றும் இவ்வாறான படுகொலைகளை நிறுத்தி நாட்டில் அமைதியை ஏற்படுத்த அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (க)

## தீடீர்த் தேர்தல்: ஜனாதிபதி பேச்சு!

கொழும்பு,ஏப்.21

நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலொன்றை நடத்த உத்தேசித்துவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்திட்டம் குறித்த அனைத்து கட்சித் தலைவர்களுடனும் தனித்தனிப் பேச்சு நடத்தவிருக்கிறார் எனத்தெரிகிறது.

அமைதி முயற்சிகளை வலுவான முறையில் முன்னெடுப்பதை நோக்காகக்கொண்டு நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்குயோசனை கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றும் இது குறித்துத் தனக்கு நெருக்கமானவர்களுடன் மந்திராலோசனை நடத்தியிருக்கிறார். இதன்போது நாடாளுமன்றத்தைக் கலைக்கும் விடயம் குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் பேச்சு நடத்தத் தாம் ஆர்வம் கொண்டிருக்கிறார் என்ற தகவலை ஜனாதிபதிக்குத் தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் நேற்று உதயனுக்குக் கருத்து தெரிவித்த மூத்த அமைச்சரொருவர் மேற்கண்ட விடயம் குறித்த பேச்சுகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் கூறினார். (க)(18)

புலமைப்பரிசில் பரீட்சை.வகுப்பு.
தரம்:5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்
திரு.கணேசலிங்கம் அவர்களின்
வெற்றித்தேர்வு-4
பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகிறது.
வெற்றித்தேர்வு-5.6
21.4.06.28.4.06 ஆகிய திகதிகளில் வெளிவரும்.
அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வினாவிடை வகுப்பு
சனி,ஞாயிறு,செவ்வாய்,புதன்,வியாழன்,காலை 6.30 மணிக்கு.
வினாவிடைப் பயிற்சி, பரீட்சைகள், மீட்டல்.
அரியாலை சயன்ஸ் அக்கடமி

கருத்தரங்கு
தொடர் II
LOGIC
R.P.சர்மா
S.R.J. சுதன்
ஞாயிறு 9 a.m.
D.C.M.
யாழ். நகர்

## தற்போதைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியை இருதரப்புக்கும் தெரிவித்துள்ளோம்.

இறுதித்தீர் காண்பதற்கும், சமாதானத்தைக் கொண்டுவருவதற்கும் பேச்சைத் தவிர வேறு வழியில்லை என நம்புகிறோம். இரு தரப்புகளின் அரசியல் தலைவர்களும் பிரச்சினையின் தன்மையைப் புரிந்து இணைந்து செயற்படவேண்டும் - என்றார் அவர். (க)

## புலித்தளபதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமிருந்து பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டதாம்.

இத்தகைய ஹெலிகொப்டரில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கூட பயணஞ் செய்வதற்குப் புலிகள் தரப்பில் இணக்கம் தெரிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்துக்கு அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரிடமிருந்தும் சம்மதம் கிடைக்குமானால் நோர்வேத் தரப்பினரும் கண்காணிப்புக் குழுவினரும் இணைந்து, இயன்ற விரைவில் இந்தப் பயணங்களை ஒழுங்கு செய்வர் என்றும் கூறப்பட்டது. (க)

## சுழிபுரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுவிட்டு, மோட்டார் சைக்கிளில் வந்த இன்னொரு நபருடன் தப்பிச் சென்றுவிட்டார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி இப்பகுதி கிராம சேவையாளர் வட்டுக்கோட்டைப் பொலீஸாருக்கும் மல்லாகம் நீதிவானுக்கும் தகவல் தெரிவித்ததை அடுத்து விசாரணைகள் இடம்பெற்றன.

மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் சடலத்தை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்ட பின் னர்பிரேத பரிசோ தனை, மற்றும் மரண விசாரணைக்காக சட லத்தை யாழ் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கும்படி வட்டுக்கோட்டை பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

(ம-15-24-29- 78-139-175)

## 24,25 இல் பேச்சு நடத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுகள் நேற்றுமுற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு முடிவடைந்தன.

வழமையாகக் கிளிநொச்சியில் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெறும் பேச்சு, நேற்று புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இடம்பெற்றது.

பேச்சை அடுத்து தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்குப் பேச்சின் விவரங்களைத் தெரிவித்தார்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது:-

இன்றுள்ள கள நிலைவரம் குறித்து விளக்கியுள்ளோம். முக்கியமாக, ஜெனீவாப் பேச்சில் நாம் கலந்துகொள்வதற்கு இடைஞ்சலாக இருக்கும் தடைகள் பற்றியும், இலங்கை அரசும் படைத்தரப்பும் ஏற்படுத்தியுள்ள நெருக்கடிகள் குறித்தும் எடுத்து விளக்கியுள்ளோம்.

எதிர்வரும் தினங்களில் - நிர்ணயிக்கப்பட்ட தினங்களில் - எம்மால் பேச்சில் கலந்துகொள்ள முடியாத - பேச்சுக்குப் போக முடியாத நிலைமை இருப்பது குறித்து விளக்கினோம். எமது நிலைப்பாட்டைக் கரிசனையோடு தாம் நோக்குகின்றார் எனத் தெரிவித்த தூதுவர், இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு விடயங்களை முன்நகர்த்தத் தாம் முயற்சிப்பார் எனக் கூறினார்.

ஜெனீவா உடன்பாட்டுக்குப் பின்னர் தாயகப் பிரதேசத்தில் வன்முறைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. ஆயுதக் குழுக்களினதும் இராணுவத்தினதும் வன்முறைகள் அதிகரித்து, தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை தீவிரமாக்கப்பட்டுள்ளது.

தமிழப் பற்றாளர்கள், புத்திஜீவிகள் முதல் எமது சாதாரண மக்கள்வரை படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

திருமலை இனக்கலவரங்கள், படுகொலைகள், யாழ்ப்பாணத்தில் நடந்த பெரிய படுகொலை போன்றவற்றைப் புள்ளிவிவரங்களுடன் சுட்டிக்காட்டியுள்ளோம்.

மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள், படுகொலைகள் நிறுத்தப்படாதவரை மக்களின் கொந்தளிப்பான நிலையை நாங்கள் கட்டுப்படுத்துவது கஷ்ரமாக இருக்கும். இது யுத்த நிறுத்தச் சூழலை இல்லாதொழிக்கின்ற ஒரு நிலைமைதான் என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இன்று உருவாகியுள்ள நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளோம். இவ்வாறு தமிழ்ச் செல்வன் குறிப்பிட்டார்.

(க-3)

பணிநிலை வேண்டுகை
புத்தகம் கட்டுனர் (பெண்கள்)
(Book Binders)
கரிகணன் பிறிண்டேர்ஸ்,
இல:424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
25.04.2006 ஆம்
1.00 மணி - மாலை 4.00

Diploma in Internet & E-Mail
Speed Batch Only 10 Hours
Start on - 22-04-2006
Days :- Sat, Sun
Time :- 3.00 p.m
Only For 10 Students
Fees :- 1000/=
Batch - 06
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

DIPLOMA IN COMPUTER HARDWARE
SPEED BATCH ONLY 20 Hours
GROUP CLASSES
Only For 10 Students
Days:- Sat, Sun.
Time:- 9.30 a.m.
Fees:-1500/=
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
Batch Starts on 22-04-2006
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

மாபெரும் கருத்தரங்கு
தமிழ்
தமிழ்க்குழந்தை
9.00-12.00 A.M. Part -I
அளவையியல்
திரு. சயந்தன்
2.00-5.00 P.M. Part -I
ஆரம்பம் : 26.04.2006
இந்து நாகரிகம்
திரு. பத்மராஜ் 2.00 P.M.
ஆரம்பம் : 27.04.2006
வித்னா கல்வி நிறுவனம்

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

வெளியீடு **09**

# புலமைப்பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்

*நேரம் : 1.15 மணி*

திரு. வே. அன்பழகன் - யாழ்.

**01. பின்வரும் பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள படிவத்தை நிரப்புங்கள்.**

அருட்செல்வம் எனும் சிறுவன் நீர்கொழும்புக் கடற்கரை வீதியில் வசிக்கின்றான். அவனது தந்தை குணசீலன் சிறிய கடையொன்று வைத்திருக்கிறார். நான்காம் தரத்தில் கல்வி கற்கும் அருட்செல்வத்தின் வயது 9 வருடமும் 6 மாதமும் ஆகும்.

(01) சிறுவனின் முழுப்பெயர் :..........................................
(02) சிறுவனின் வயது :..........................................
(03) சிறுவனின் தந்தையின் பெயர்:..........................................
(04) சிறுவனின் தந்தையின் தொழில்:..........................................
(05) சிறுவன் கல்வி கற்கும் வகுப்பு:..........................................
(06) சிறுவனின் வசிப்பிட விலாசம்:..........................................

**02. கடந்த ஆண்டு மாதங்களில் கடையொன்றில் விற்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.**

நவம்பர் - 128    டிசெம்பர் – 216    ஜனவரி – 307
பெப்ரவரி – 321    மார்ச் - 284    ஏப்ரல் - 489

(01) எந்த மாதத்தில் கூடுதலாகப் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன?
.............................
(02) ஏப்ரல் மாதத்தை விட மார்ச் மாதத்தில் எத்தனை புத்தகங்கள் குறைவாக விற்பனை செய்யப்பட்டன? .............................
(03) நவம்பர் மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களிலும் பார்க்க எத்தனை புத்தகங்கள் டிசெம்பர் மாதத்தில் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டன?
.............................
(04) ஜனவரி மாதத்திலும் பார்க்க பெப்ரவரி மாதத்தில் எத்தனை புத்தகங்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டன?
.............................
(05) நவம்பர், டிசெம்பர் மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களிலும் பார்க்க ஏப்ரல் மாதத்தில் எத்தஜன புத்தகங்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டன? .............................

**03. கீழ் உள்ள அறிவித்தலை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கணனி வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றன. கணனிக் கல்வியைக் கற்க விருப்பமுள்ள மாணவர்கள், பெற்றோர்களின் சம்மதக் கடிதத்தை அலுவலகத்தில் சமர்ப்பித்துத் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

**- அதிபர் -**

(01) கணனி வகுப்புகள் நடைபெறும் தினங்கள் எவை?..........., ...............
(02) கணனிக் கல்வியைக் கற்க விரும்பும் மாணவர்கள், பெற்றோரிடம் இருந்து பெறவேண்டியது என்ன? .............................
(03) இந்த அறிவித்தலை விடுத்தவர் யார்? .............................

**மேலுள்ள அறிவித்தலின் பிரகாரம் கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் X எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

(04) ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கணனி வகுப்புகள் நடைபெறுகின்றன. ( )
(05) பெற்றோரின் விருப்பம் இல்லாமல் ஒரு மாணவனால் கணனி வகுப்பில் சேர்ந்து கொள்ள முடியாது. ( )
(06) ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான கணனி வகுப்புக்கள் பாடசாலை நேரங்களிலேயே நடாத்தப்படுகின்றன. ( )

**ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிந்து கீறிடுக.**

(07) தினங்களில் (நாள்களில், திகதிகளில், நேரங்களில்)
(08) விருப்பம் (வெறுப்பு, மகிழ்ச்சி, ஆசை)

**பன்மைச் சொற்களுக்கான ஒருமைச் சொற்களை எழுதுக**

(09) வகுப்புகள் .............................    (10) நடைபெறுகின்றன .............................

**பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை எழுதுக.**

(11) OFFICE .............................    (12) PRINCIPAL .............................

**பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

(13) ஞாயிறு .............................    (14) பெயர் .............................

(15) பெயர்ச் சொல்லைத் தெரிந்து கீறிடுக
1) கணனி    2) சமர்ப்பித்து    3) கற்க
(16) வினைச்சொல்லைத் தெரிந்து கீறிடுக
1) சனி    2) பிரிவு    3) நடைபெறுகின்றன

**பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

(17) கணனிக் கல்வி = .................. +....................
(18) விருப்பமுள்ள = .................. +....................

**04. பின்வரும் பூச்சிகளின் பெயர்களைத் தெரிந்து எழுதுக**

(சில்வண்டு, நீர்தோட்டி, கொள்ளியெறும்பு, புசிணிவண்டு, எருதுவண்டு, லேடிபேட், குளவி)



**05. பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிந்து கீறிடுக.**

(01) நாம் வீதியில் நடந்து செல்ல வேண்டிய பக்கம் எது?
1) வலது    2) இடது    3) விரும்பிய பக்கம்
(02) மழைக்காலம் தொடங்கும் முன்னர் தமக்குத் தவையான உணவுகளைக் காவிச் சென்று சேமித்து வைக்கும் பிராணி எது?
1) காகம்    2) பல்லி    3) எறும்பு
(03) உணவுப் பொருள்களைக் கண்டால் தனது இனத்தை அழைத்துக் கூடி உண்ணும் வழக்கமுடைய பறவை எது?
1) கொக்கு    2) காகம்    3) புறா
(04) பின்வரும் எந்த மரத்தின் பூக்கள் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன?
1) மா    2) கொய்யா    3) வேம்பு
(05) பொதி செய்யப்பட்ட உணவுப் பொருள் ஒன்றை வாங்கும் போது நாம் அவதானிக்க வேண்டிய முக்கிய அம்சம் எது?
1) காலாவதித் திகதி    2) விலை    3) நிறை
(06) இலங்கைக்கு அண்மையில் இல்லாத ஒரு நாடு பின்வருவனவற்றுள் எது?
1) பிரான்ஸ்    2) மாலைதீவு    3) வங்காளதேசம்
(07) இலங்கைத் தேசிய கீதத்தின் இரண்டு வரிகள் கீழே தரப்பட்டுள்ளன.
நமதாரருள் ஆனாய்
நவைதவிர் உணர்வனாய்
இந்த இரண்டு வரிகளையும் அடுத்து வரும் வரி எது?
1) நமதிளமையை நாட்டே    2) நமதேர் வலியானாய்
3) அமைவுறும் அறிவுடனே
(08) இலங்கையின் தேசியப் பறவை எது?
1) மயில்    2) தீக்கோழி    3) காட்டுக் கோழி
(09) கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடுபவர்கள் தலைக்கவசம் அணிந்து கொள்வது ஏன்?
1) அழகுக்காக 2) அதிக ஓட்டம் பெற 3) பாதுகாப்பிற்காக
(10) வித்துக்களைப் பயன்படுத்தி செய்யும் ஆக்கத்தின் பெயர்?
1) கொலாஜ்    2) பற்றிக்    3) அல்பூனா    4) பின்னல்




**06. பின்வரும் வித்துக்களின் பெயர்களை எழுதுங்கள்.**

1)  ____________    2)  ____________

**07. கீழே உள்ள சிட்டையைப் பூர்த்தி செய்யுங்கள்.**

| பொருள் | ஒன்றின் விலை | அளவு | பெறுமதி ரூ சதம் |
|---|---|---|---|
| பேனா | 9.50 | 1 | |
| பென்சில் | 5.00 | 3 | |
| அழிறப்பர் | 2.50 | 4 | |
| அப்பியாசப் புத்தகம் | 10.00 | 2 | |
| மொத்தம் | | | |
| | | | |

**08. பின்வரும் கருவிகளின் பெயர்களை எழுதுக.**

(1)  ____________
(2)  ____________
(3)  ____________
(4)  ____________
(5)  ____________

**09. கீழ் உள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள தொழிலாளி பயன்படுத்தும் உபகரணத்தை அடைப்புக்குள் இருந்து தெரிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

(துருத்தி,    தூக்குக் குண்டு,    சீவுளி,    மண்வெட்டி,    வலை)

(01) விவசாயி ..........................................
(02) மேசன் (கொத்தன்) ..........................................
(03) தச்சன் ..........................................
(04) மீனவன் ..........................................
(05) இரும்புத் தொழிலாளி ..........................................

(5 புள்ளிகள்)

**10. தரப்பட்ட துண்டுப் பிரசுரத்தை நன்கு வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

அன்பார்ந்த பொதுமக்களே!
டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். டெங்குக் காய்ச்சல் அபாயத்தில் இருந்து உங்களைப் பாதுகாக்க நீங்கள் செய்ய வேண்டியது என்ன?
கண்ட கண்ட இடங்களில் குப்பைகளைப் போடுவதைத் தவிருங்கள்.
சுற்றுப்புறங்களில் சிரட்டை, பேணி, பிளாஸ்ரிக் போத்தல்கள் போன்றவற்றைக் கண்டால் உடனே அப்புறப்படுத்துங்கள். சுற்றுப் புறங்களில் நீர் தேங்கி நிற்பதற்கு இடமளிக்காதீர்கள். சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்திருந்தால் டெங்குக் காய்ச்சலை உருவாக்கும் நுளம்புகளை இல்லா தொழிக்க முடியும்.
வெள்ளம் வரும்முன் அணை கட்டுங்கள்.

**சுகாதாரப் பகுதி**

(01) இந்தத் துண்டுப் பிரசுரம் யாருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது?
.............................
(02) இந்தத் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர்கள் யார்?
.............................
(03) இந்தத் துண்டுப் பிரசுரத்தில் எதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது?
.............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(04) மேலுள்ள பகுதியில் உள்ள பழமொழியை எழுதுக.
.......................................................
(05) எவற்றை அப்புறப்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.
......................................

**ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக**

(06) அபாயம்........................
(07) நீர் ........................
(08) தூய்மை........................
(09) பந்தியில் உள்ள முன்னிலைப் பெயர்ச் சொல் எது?
........................
(10) மேலுள்ள பந்தியில் குறிப்பிடப்படும் நோய் எதனால் பரப்பப்படும்?
........................

**11.கொடுக்கப்பட்ட சொற்கூட்டங்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1) இரவில் .............................. தோன்றும் (சந்திரன், சூரியன்)
2) பாட்டி .............................. என்று நடந்தார். (கடகட, குடுகுடு)

**12.பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொல்லை தமிழ் உச்சரிப்பில் எழுதுக**


1) நான் நல்ல சுகம்........................
2) உங்களுடைய பெயர் என்ன? ........................
3) கறுப்பு நிறம் ........................

**13.பின்வரும் சிங்களச் சொல்லின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

1) அச........................
2) சுதுப்பாட்ட........................
3) பிச்சமல........................

**14.பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையை எழுதுக.**

1) 1825 இதைச் சொற்களில் எழுதுக
........................................................................
2) ஐயாயிரத்துப் பதினெட்டு என்பதை இலக்கத்தில் எழுதுக............
........................................
3) 6, 1, 8, 3 ஆகிய இலக்கங்களைப் பாவித்து எழுதக் கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக........................
4) 5, 3, 7, 6 ஆகிய இலக்கங்களைப் பாவித்து எழுதக்கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக. ........................
5) உரோமன் எண்ணில் எழுதுக
(1) 15 .................... (2) 16....................
6) முன், பின் எண்களை எழுதுக. .................... 39 999
..................
7) இவ் உருவின் சுற்றளவைக் காணுங்கள் ........................................




8) 836, 683, 638, 863 இவற்றை ஏறுவரிசையில் எழுதுக.
..................................................
9) 6975 இல் இலக்கம் 9 இன் பெறுமதி யாது?
..................................................
10) 2 ஆயிரங்கள், மூன்று நூறுகள், 7 பத்துக்கள், 7 ஒன்றுகள் ஆகியவற்றைச் சேர்க்க வரும் எண் யாது? ..............................

**15.தீருங்கள்**

1) ஞாயிற்றுக்கிழமை மிருகக் காட்சிச்சாலைக்கு வருகை தரும் ஆண்களின் எண்ணிக்கை 1247 உம், பெண்களின் எண்ணிக்கை 728 உம் ஆகும். எனின் வருகை தந்தோரின் மொத்த எண்ணிக்கை யாது? ........................
2) ஒரு பிள்ளைக்கு 4 எள்ளுருண்டைகள் வீதம் 36 பிள்ளைகளுக்கு கொடுப்பதற்கு எத்தனை எள்ளுருண்டைகள் தேவை? ........................
3) தொழிற்சாலை ஒன்றின் 9786 சட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றுள் 3628 விற்கப்பட்டன. எனின் எஞ்சியுள்ள சட்டைகளின் எண்ணிக்கையைக் காணுங்கள். ........................
4) 416 விசுக்கோத்துக்கள் பிள்ளை ஒன்றிற்கு 4 வீதம் எத்தனை பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்? ........................
5) 8 மீற்றர் நீளமுள்ள கம்பியொன்று இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு அவற்றுள் ஒரு பகுதி பின்பு இருசம பகுதிகளாக வெட்டப்பட்டது. அவற்றின் ஒரு துண்டத்தின் நீளம் எத்தனை சென்ரி மீற்றர்? ........................cm

**16."நான் எனது நண்பர்களுடன் வீட்டு முற்றத்தில் நின்ற மாமரத்தின் கீழ் விளையாடிக் கொண்டிருந்தபோது............. என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வசனங்கள் எழுதுக. ஒரு வசனத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.**

01. ..................................................................
..................................................................
02. ..................................................................
..................................................................
03. ..................................................................
..................................................................
04. ..................................................................
..................................................................
05. ..................................................................
..................................................................
06. ..................................................................
..................................................................

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 01

# பொருளியல் - I

திரு. S.வரதராஜன் B.A.*(Hons)* - *யாழ்ப்பாணம்.*

### பகுதி II

24.03.2006ஆம் திகதி வெளியாகிய விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றது.

2) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்திப் பொதுவிலை மட்டத்தை உறுதியாக வைத்திருத்தல்
உற்பத்திமட்டம், வேலைவாய்ப்பு மட்டம் என்பவற்றில் ஏற்படும் தளம்பல்களைத் தவிர்த்தல்.
சென்மதி நிலுவையில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான குறைநிலைகளைத் தவிர்த்து சமநிலை பேணுதல்.
நாணயமாற்று வீதத்தை உறுதியாக வைத்திருத்தல்.
பணவீக்கமும் நிலவும்போது மிகைநிலை வரவு[illegible] நிலவும்போது குறைநிலை வரவுசெலவுத் திட்டத்தையும் தயாரித்தல் வேண்டும்.
வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு பணவீக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மூலகங்களிலிருந்தும் வங்கித்துறை மூலங்களிலிருந்தும் கடன்பெறுதலைத் தவிர்த்தல்.
மறைமுகவரிகளில் பெருமளவில் தங்கியிருத்தலைக் குறைத்தல்.
ஏற்றுமதி வருமானம், இறக்குமதிச் செலவுகள் என்பவற்றை ஒழுங்குபடுத்துவதன் மூலம் நாணயமாற்று வீதத்தை உறுதியாக வைத்திருத்தல்.

3) பொருளாதார வகைப்படுத்தல்
பொருள்களின் பணிகள் மீதான செலவு 42%
வட்டிக்கொடுப்பனவுகள் 31%
நடைமுறை மாற்றல்கள் 27%

தொழிற்பாட்டு வகைப்படுத்தல்
அரச பொதுப் பணிகள் 25%
சமூகப் பணிகள் 36%
பொருளாதாரப் பணிகள் 6%
ஏனையவை (குறிப்பாக வட்டி) 33%

வினா இல. 8

நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை
மொத்த வருமானத்திலும் பார்க்க அரசின் மொத்த நடைமுறைக் கொடுப்பனவுகள் உயர்வாக இருக்கும் போது ஏற்படும் பற்றாக்குறை

முதன்மைப் பற்றாக்குறை
மொத்த அரசிறை வருமானத்திலும் பார்க்க அரசின் வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக உள்ள அரசின் மொத்தக் கொடுப்பனவு உயர்வாக இருக்கும்போது ஏற்படும் பற்றாக்குறை. அதாவது அரசின் வட்டிக் கொடுப்பனவுகள் உயர்வாக இருக்கும் போது ஏற்படும் பற்றாக்குறை. அதாவது அரசின் வட்டிக் கொடுப்பனவு நீங்கலாக உள்ள வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை.

2. * அரச சேமிப்பு உருவாகாது மட்டுமன்றி அரச சேமிப்பு எதிர்க்கணியமாக இருக்கும்
* அரசின் வருமானம் அதன் நடைமுறைச் செலவுகளை மேற்கொள்வதற்குக் கூட போதாமல் உள்ளது.
* வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையின் அளவு அதிகரிக்கும்.
* அரசாங்கப் படுகடன் அதிகரிக்கும்.
* தனியார் துறையினருக்குக் கிடைக்கும் கடன் வசதிகள் பாதிக்கப்படும்.

3 * உள்நாட்டு சந்தையில் வங்கித்துறைக் கடன்.
* உள்நாட்டு சந்தையில் வங்கியல்லாத்துறைக் கடன்.
* உள்நாட்டு சந்தையில்லாக் கடன்.
* வெளிநாட்டுக் கடன்களும் நன்கொடைகளும்.

# பொருளியல் - II

### பகுதி-1

| | | | |
|---|---|---|---|
| (1) **I, V** | (2) **IV** | (3) **II** | (4) **II** |
| (5) **I** | (6) **II, III, IV** | (7) **II** | (8) **III, IV** |
| (9) **I, V** | (10) **I** மூலதன நிதியியல் கணக்கு நிலுவை **II** பணிகள் நிலுவை, வருமான நிலுவை, நடைமுறை மாற்றல் நிலுவை என்பவற்றின் கூட்டுத்தொகை. | | |
| (11) **I** | (12) **III** | (13) **I, III** | (14) **V** |
| (15) **IV** | (16) **IV** | (17) **I** | (18) **II** |
| (19) **II** | (20) **I** | | |

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 08

# புலமைப்பரிசில் பரீட்சை

திரு. வே. அன்பழகன் - யாழ்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) 1 | 02) 3 | 03) ஆணி | 04) பந்து | 05) 3 | 06) 2 |
| 07) யாழ்ப்பாணம். | | 08) புகையிரதம் | | 09) 15 | 10) 30 |
| 11) 3 | 12) 2 | 13) 2 | 14) 1 | 15) 2 | 16) 4 |
| 17) 1 | 18) 4 | 19) 2 | 20) 2 | 21) 1 | 22) 1 |
| 23) 2 | 24) 18 | 25) 18 | 26) 3 | 27) 2 | 28) 3 |
| 29) 1 | 30) 2 | 31) 1 | 32) 2 | 33) 3 | 34) 2 |
| 35) 1 | 36) 3 | 37) 2 | 38) 2 | 39) 1 | 40) 2 |

(40 x 2 1/2 = 100 புள்ளிகள்)

## அன்பு மாணவர்களே!

*இலங்கையின் கல்வியில் தலைசிறந்து விளங்கும் மாவட்டங்களின் முன்னணி ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாளும், விடைகளும் உங்கள் பரீட்சை நலன்கருதி இங்கு வெளிவருகின்றன. அந்தவகையில் எதிர்வரும் வாரங்களிலும் தலைசிறந்த ஆசிரியர்களின் பரீட்சை எதிர்பார்ப்புடன் கூடிய வினாத்தாள்களும் வெளிவரவுள்ளன. அத்துடன், எமது கல்விச்சுடரினால் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கும் பிரபல ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்களும் எதிர்வரும் காலங்களிலும் இப்பகுதியில் பிரசுரிக்கப்படவுள்ளன. பரீட்சை நடைபெறும் திகதி வரை எம்மால் வெளியிடப்படும் பல வினாத்தாள்களில் பல ஆசிரியர்களின் வேறுபட்ட வினா "வியூகங்கள்" அமைந்திருப்பதால் இப்பகுதியில் வெளிவரும் வினாக்களில் பெரும்பாலானவை இறுதி அரசப்பரீட்சைகளின் வினாக்களாக வெளிவரும் என்பதில் கல்விச்சுடர் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே மாணவர்களே! உங்கள் சிறந்த பெறுபேறுகளுக்காகக் கல்விச்சுடருடன் இணைந்திருங்கள்.*

கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தொ.பே. இல. 0714273035, 0714220008

**கல்விச்சுடர்**
**உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org